

# ரமணோதயம்

ஜனவரி 2018
காலாண்டு

ஜயந்தி இதழ்
விலை ₹ 20



138 ஆவது ரமண ஜயந்தி -
ஸ்ரீரமணாச்ரமம், திருவண்ணாமலை



உதயம் 17 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 2

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஜயந்தி இதழ்

ஜனவரி 2018

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஜயந்தி இதழ், ஜனவரி 2018


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | ஔவை மூதாட்டியின் அருள் குறள் — ராம் மோஹன் | 16 |
| 3 | ஞானத் திறவுகோல் — சு. பரமேஸ்வரன், கோவை | 25 |
| 4 | இனிவரும் திருநாட்கள் | 31 |
| 5 | அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம் பகுதி 9 — டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 32 |
| 6 | கண்ணைக் கட்டிக் காட்டில் விடுதல் | 44 |
| 7 | ஸ்ரீ திண்ணை சுவாமிகள் | 45 |
| 8 | பேரமைதி நிலவிய திருநாட்கள் -5 மௌனி சாது | 57 |
| 9 | ரமணாயனம் — க்ரேஸி மோஹன் | 65 |
| 10 | பழனி - திருவாவினன்குடியும் ரமண அவதாரமும் — ஆகுரா | 71 |
| 11 | செய்திகள் | 73 |


***முன்அட்டைப் படம்:*** *ஸ்ரீரமணாச்ரமத்திற்கு அருகில் அமைந்துள்ள பாண்டவ தீர்த்தத்தில் இருந்து கார்த்திகை தீப தரிசனம்.*

*பின்அட்டைப் படம்: 138 ஆவது ரமண ஜயந்தி விழா - ஸ்ரீ ரமணாச்ரமம் திருவண்ணாமலை.*

Front cover: © Photography by Dev Gogoi

# ஆசிரியர் உரை

## பாசி மறைத்த பரமன் அருள்

நீங்கள் ஒரு பூரான் கதையினைக் கேட்டுள்ளீர்களா? இது தனது நூறு கால்களைக்கொண்டு நடப்பதால் இதற்கு நூறுகால் பிராணி (centipede) என்ற பெயர் வந்து விட்டது. அது நூறுகால்களினால் சற்றும் குழப்பம் இன்றி, ஸ்வபாவமாக நடந்து செல்லும்.

இதை ஒரு நரி பார்த்தது. அதற்கு மிகுந்த ஆச்சரியம் ஏற்பட்டது. அது பூரானைக் கேட்டது: "எப்படி உன்னால் நூறு கால்களால் நடக்க முடிகிறது? எந்தக் காலைப் பின்வைக்க வேண்டும், எதை முன்வைக்க வேண்டும் – இதையெல்லம் எப்படித் திட்டமிடுகிறாய்? கால்கள் வைப்பதில் பிரச்சினை வந்தால் அதை எப்படிச் சமாளிக்கிறாய்? எப்படி உன்னால் குழப்பமில்லாமல் நடைபோட முடிகிறது?"

அதற்குப் பூரான் விடையளித்தது: "நான் வாழ்நாள் முழுவதும் இப்படித்தான் நடந்துகொண்டு இருக்கிறேன். என்னால் எப்படி இவ்விதம் நடக்கமுடிகிறது என்று சிந்தித்ததே இல்லை. சற்று அவகாசம் கொடு. யோசித்துச் சொல்கிறேன்" என்றது. அதன்பின் பூரான் கண்ணை மூடிக்கொண்டு யோசிக்க ஆரம்பித்து விட்டது. அதுவரை ஒன்றாக இருந்த மனம் இருகூறாகப் பிளவுபடத் தொடங்கியது. கவனிப்பவனாகவும், கவனிக்கப்படு பொருளாகவும் இரண்டுபட்டது; த்வந்துவ நிலை வந்துற்றது. இதுவரை அது வாழ்வில் முழுமையாக வாழ்ந்து வந்தது. அதைக் கவனிப்பதற்கு யாரும் அங்கில்லை. இப்போது அது

*முதல்முறையாக இரண்டுபட்டது. காண்பானாகவும், காணப்படும் பொருளாகவும் ஆனது. இங்ஙனம் பார்ப்பவனாகவும் கவனிக்கப்படு பொருளாகவும் ஆன அது நடந்து பார்த்தது. அது மிகச் சிரமமாக இருந்தது. நடக்கமுடியாமல் கீழே விழுந்துவிட்டது. நூறுகால்கள் ஒவ்வொன்றும் எங்கே செல்கின்றன என்று அதனால் கவனிக்க இயலவில்லை.*

*நரி சிரித்தது: "நான் இது மிகக் கடினம் என்று எண்ணினேன். அது உண்மையாகி விட்டது." அதைக் கேட்டு அழ ஆரம்பித்த பூரான், "எனக்கு இதுவரை நூறுகால்களால் நடப்பது பிரச்சினையாக இருந்ததில்லை. ஆனால் என்னுள் இருமை உணர்வை ஏற்படுத்தி பிரச்சினையை உருவாக்கி விட்டாய், இனி சுபாவிகமாய் நடக்கமுடியாது என்று தோன்றுகிறது" என்றது.*

*இருமைகள் எழும்போது அவற்றுடன் மனக்குழப்பமும், அறிவை இழத்தலும் எழுகின்றன. எண்ணங்கள் எழும்போது குழப்பமும் எழுகின்றது. எண்ணங்களின் மனத்தில் தோற்றமே துக்கம். எண்ணங்களின் ஒடுக்கமே சுகம் என்பதே நமது அத்துவிதத்தின் அடிப்படை. காண்பான்-காணப்படும் பொருள் – இவை துவந்துவங்கள் எனப்படும் இரட்டைகளாகும். காணப்படும் அனைத்துமே நன்மை-தீமை, இருள்-ஒளி, சுகம்-துக்கம், அறிவு-அறியாமை, பந்தம்-விடுதலை ஆகியவைகள் துவந்துவங்கள் அல்லது இரட்டைகள் ஆகும். இது விரியும்போது காட்சி-காண்பான்-காணப்படுபொருள், அறிவோன்-அறிவு-அறியப்படும் பொருள் என்னும் திரிபுடிகள் (முப்புடிகள்) ஆக வடிவெடுக்கிறது. இந்த துவந்துவங்கள், திரிபுடிகள் இவை அனைத்துமே ஆழ்ந்த தூக்கத்தில் இல்லை. அகந்தை என்னும் தன்முனைப்பு, ஆழ் உறக்கத்தில் இல்லை. அகந்தை எழும்போது*



மனமும் எழுகிறது. ஆகவே இவை அனைத்தும் அகந்தை என்னும் ஒன்றைப் பற்றியே எழுவனவாம். நம்முடைய இயற்கை நிலையான இருப்பு நிலையில் அகந்தை ஒடுங்குவதால் இவை எழுவதில்லை. எனவே எக் குழப்பமும் இல்லை. எண்ணங்கள் எழாத நிலையில் பூரான் எவ்வித முயற்சியும் இன்றி ஸ்வபாவிகமாக நடக்கிறதல்லவா? இந்த நிலையையே அருணகிரி நாதர் “இருந்தபடி இருங்கோள்” எனக் குறிப்பிடுகிறார். கிருஷ்ணமூர்த்தி இதையே கூறுகிறார்: “எப்பொழுது கவனிப்பவன் கவனிக்கப்படுகிறானோ, அப்பொழுதே உங்கட்கு தியானம் சித்திக்கிறது.”

இதற்கு எதிரானது அந்தப் பூரானுக்கு நிகழ்ந்தது. அதன் முழுமை இழக்கப்பட்டு அது இரண்டானது. கவனிப்பவன், கவனிக்கப்படுபவன் என்ற பிரிவு ஏற்பட்டு விட்டது. எழுவாயாகவும், செயப்படு பொருளாகவும், எண்ணுபவனாகவும், எண்ணமாகவும் பிரிவு ஏற்பட்டு விடுகிறது. மனச் சிக்கல்கள் உருவாகி விடுகின்றன. உள்ளாழ்ந்த ஆனந்தம் இழக்கப்பட்டு விடுகிறது.

இதனையே பகவான் உள்ளது நாற்பது 14ஆவது பாடலில் கூறுகிறார்:

*தன்மையுண்டேல் முன்னிலை படர்க்கைகள்*
*தாம்உளவாம்*
*தன்மையின் உண்மையைத் தான்ஆய்ந்து —*
*தன்மையறின்*
*முன்னிலை படர்க்கை முடிவுஉற்றுஒன்றாய் ஒளிரும்*
*தன்மையே தன்னிலைமை தான்.*

'நான் தேகம்' என்ற அகங்காரமாகிய தன்மை உணர்வு இருக்கும்போதுதான் 'நீ' அல்லது 'இது' என்னும் முன்னிலைப் பொருளும், அவன், அவள், அது அவை என்னும் படர்க்கைப் பொருட்களும் கூடவே தோன்றுகின்றன. 'நான் யார்' என்ற இருப்புணர்வு எங்கிருந்து எழுகிறது? 'நான் யார்' என்பதை விசாரணை மூலம் அறிந்தால் அகந்தை அறவே அழிந்து போகும்.

சீன தத்துவ ஞானி லாவோத்ஸே கூறுகிறார்: "தர்க்கவாதிகள் (அல்லது வெற்று ஆராய்ச்சியாளர்) இல்லாத சமயத்தில் எல்லாம் நல்லபடி நிகழ்ந்துவிடுகின்றது. அங்குக் கேள்விகள் எதுவும் கிடையாது. எல்லா பதில்களும் இருக்கின்றன. கேள்வி கேட்பதை நிறுத்தியவுடன் பதில் எப்பொழுதுமே அங்கு இருப்பதைக் கண்டு கொள்வோம்." பால்பிரண்டன் போன்ற ஆத்மிக ஆர்வலர் முதல் பூரி சங்கராசார்ய ஸ்வாமிகள், நாராயணகுரு போன்ற ஆன்மிக இமயங்களின் அனுபவமும் இதுவே.

அந்தப் பூரானுக்கு என்ன ஆயிற்று என்பது எனக்குத் தெரியாதே. அது நம் போன்ற மனிதராய் இருப்பின் ஏதோ ஒரு மனநிலையில் அடைபட்டிருக்கும். ஆனால் நம்மைவிட அது புத்திசாலியாய் இருப்பின் "உன் கேள்வியை நீயே வைத்துக்கொள். நான் வழக்கம்போல் என் வழியில் நடந்து போய்க் கொள்கிறேன்" என்று நரியிடம் சொல்லி இருக்கும்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி கூறுவதுபோல் கவனிப்பவன் எவனோ அவனே கவனிக்கப்படுபவன்

ஆகிவிடும்போது, காண்பவன்-காணப்படுபவன் என்ற பிரிவு நீங்கி, ஒன்றாகும்போது, ஆத்ம சாட்சாத்காரம், பேரானந்தம் சித்திக்கிறது. த்வைதம் – இரண்டாவது – நீங்கும்போது ஏற்படுவதே பேரானந்தம். இது வெளியில் இருந்து வரும் உணர்வல்ல. இதயத்தின் உள் ஏற்படும் ஒருமை உணர்வால் ஏற்படும் ஆனந்தம்.

நமக்கு ஏன் இப்போது இப்பேரானந்தம் நிகழவில்லை? மனம் எதிர்காலத்தில் எதையாவது எதிர்பார்த்து, ஆசைப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதுதான் நாமே உருவாக்கிக் கொள்ளும் துன்பத்திற்குக் காரணம். நாம் இந்தக் கணத்தில் மட்டும் வாழ ஆரம்பித்தோமானால், இப்பொழுதே, இங்கேயே வாழ்ந்தோமானால் துன்பம் மறைந்துவிடுகிறது.

இதுவே புத்தர் கூறும் க்ஷணிக வாதம்

யமன் நசிகேதஸுக்குக் கூறும் உபதேசம்:

அம்ருத இஹ ப⁴வதி
அத்ர ப்³ரஹ்ம ஸமஸ்துதே

உங்களால் உருவாக்கப்பட்ட உலகம் உங்களைப் பற்றிக்கொண்டு இருக்கிறது. “நீங்கள்” இல்லையென்றால் இந்த முழு உலகும் மறைந்துபோய் விடுகிறது. இருப்புணர்வு மறைந்துபோய் விடுவதில்லை. ஆனால் நாம் காணும் இந்த உலகம் மறைந்து இருப்புணர்வு தோன்றுகிறது. உலகம் என்பது மனதின் உற்பத்திதான். பகவான் உள்ளது நாற்பது ஆரம்பப் பாடலில் கூறுவதுபோல் – உள்ள பொருள் – ஒன்றே நிரந்தர இருப்பாகும். மையக்கதவு திறந்து கொள்ளும்போது, உலகம் மறைந்துவிடுகிறது. உங்களது கற்பனை எண்ணங்கள் அடியோடு மறைந்துவிட தூய்மையான இருப்புணர்வு, மட்டுமே ஒளிர்கிறது. வாவோட்ஸே இதனைத் ‘தாவ்’ எனக் கூறுகிறார். தன்முனைப்பு இல்லாத தன்மை ஒன்று மட்டுமே



உள்ளது. தன்முனைப்பு இல்லாது இருந்தாலே மற்றவை அனைத்தும் தாமே வரும்.

ஒன்றுமில்லாத நிலை. சுத்த மௌனம். இது ஒன்றே உண்மை. மற்றது எல்லாம் மனதின் கற்பனையே. இங்கிலாந்தின் பிரதமர் ஆகி இருந்த லாயிட் ஜார்ஜ் ஒருமுறை மனநிலை மருத்துவமனை (Mental Hospital) ஒன்றிற்குச் சென்றிருந்தார். அப்போதுதான் அங்கிருந்து முற்றிலும் குணமடைந்த ஒருவன் வெளியே வந்துகொண்டு இருந்தான். அவனை லாயிட் ஜார்ஜ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். “நான்தான் லாயிட் ஜார்ஜ்” இங்கிலாந்தின் பிரதம மந்திரி.

அந்தக் குணமடைந்த பைத்தியக்காரன் சிரித்துக்கொண்டே சொன்னான்: “கவலைப் படாதீர்கள். இங்கே மூன்று வருடம் தங்கி சிகிச்சை எடுத்துக் கொண்டால் போதும். நீங்களும் என்னைப்போல் முற்றிலும் குணமாகி விடலாம். நானும் இங்கு வந்தபோது என்னை நெப்போலியன் என்றுதான் எண்ணிக் கொண்டு இருந்தேன். இங்கே என்னை முற்றிலும் குணமாக்கி விட்டார்கள்.” இதுபோன்றே நாமும் நம் தன்முனைப்பு என்னும் பித்துப் பிடித்து, நான் உயர்ந்தவன், அறிவாளி அல்லது நான் இரக்கப்படத் தக்கவன் என்று மயங்கி உள்ளோம். இந்தப் பித்தினை நீக்கவேண்டும். இந்தப் பித்து நீங்க வேண்டுமெனில் வேறு ஒரு பித்துப் பிடிக்க வேண்டும். இதற்கு வழியை பகவான் கூறுகிறார்.

*பித்துவிட்டு உனைநேர் பித்தன் ஆக்கினைஅருள்*
*பித்தம் தெளிமருந்து அருணாசலா*

*– (அருணாசல அக்ஷரமணமாலை, 66)*

*அருணாசலா! இதுநாள்வரை மாயா உலக விஷயங்களின் மீதுள்ள ஆசையாகிய பித்து எனைப் பிடித்திருந்தது. இது கோணலான பித்து. இந்தப் பித்திலிருந்து உன் அருளினால், அனைத்து விஷய சுகங்களையும் நீத்து உன்னையே அடைய வேண்டும் என்ற நேரான பித்தை எனக்கு உண்டாக்கினாய். அப்படி உன்னை அடையவேண்டும் என்ற பித்தும் தெளியும்படி உன்னுடைய யதார்த்தமான பேருண்மையில் ஒன்றும்படி எனக்கு அருள்வாய் என்கிறாள் ரமண நாயகி.*

*திடம்இது பூசை செபமும் தியானம்*
*உடல்வாக்கு உளம்தொழில் உந்தீபற*
*உயர்வாகும் ஒன்றில்ஒன்று உந்தீபற.*

*– (உபதேச உந்தியார், 4)*

*ஆத்ம சாதனையில் ஏணிப் படிகள் சகுண உபாசனை ஆகிய பூஜை, ஜபம், தியானம் ஆகியவை உடல், வாக்கு இவற்றை விடச் சூக்ஷ்மமான மனதினால் செய்யப்படும் தியானம் உயர்வானது. ஜீவன் தேகத்தையே 'நான்' என எண்ணிக்கொண்டு இருக்கும், அவனை மனத்தூய்மையடையச் செய்து ஞானம் பெறத் தகுதியாக்க இந்த ஏணிப்படிகள் பயன்படுகின்றன. முற்றிலும் மனத் தூய்மை பெற்று, வாசனைகள் முற்றும் நீங்கியபின் அவன் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று. அனைத்திலும் உயர்ந்த பரம்பொருளாம் ஆத்மாவில் அகங்காரத்தை இழந்து முற்றிலும் ஒன்ற வேண்டியதே. இதையே பகவான் 'உயர்வாகும் ஒன்றில் ஒன்று' எனக் குறிப்பிடுகிறார்.*

*நாம் சென்ற இதழின் உரையாடலின்போது அறிதுயில் என்ற கருத்தினை ஆராய்ந்தோம். அகங்காரம் நீங்கி ஆத்மாவில் ஒன்றுவதே அறிதுயில்.*

*ஆங்காரம் அற்று உன் அறிவுஆன அன்பருக்கே*
*தூங்காத தூக்கம்அது தூக்கும் பராபரமே*

*– (பராபரக் கண்ணி, 74)*

*வெளிவிட யங்களை விட்டு மனம்தன்*
*ஒளிஉரு ஓர்தலே உந்தீபற*
*உண்மை உணர்ச்சியாம் உந்தீபற.*

*– (உபதேச உந்தியார், 16)*

*மனமானது உலக சம்பந்தமான வெளி விஷயங்களை ஐம்புலன்களின் வாயிலாக அறிவதை விட்டு இந்த வெளி விஷயங்களை நமக்குப் புலப்படுத்தும் ஒளி எங்கிருந்து வருகிறதோ அந்தத் தன்னுடைய உண்மை வடிவாகிய அறிவொளியை ஆய்ந்து அறிவதே உண்மை உணரும் ஞானம் என்கிறார் பகவான்.*

*பேரருளாகிய பரமாத்மாவே நமது சித்ஸ்வரூபம். உடலைத் தான் என்னும் அகங்காரத்தை விடுத்து ஞானப் பெருவெளியில் திளைத்திருப்பவர்களே உண்மை ஞானிகள். அவ்வன்பர்கள் அடையப் பெற்றுள்ள பெருநிலையே தூங்காத தூக்கம். தூங்குகின்ற தூக்கம் தூங்காத தூக்கம் என்ற இரு நிலைகளையும் தாயுமானவர் சீர்தூக்கிப் பார்க்கிறார். தூங்குகின்ற தூக்கம் ஜீவன்கள் அனைத்திற்கும் பொதுவானது. தூக்கத்தில் ஜீவன் தன் உடலையும், மனத்தையும் மறக்கிறான். அந்த மறதியின் மூலம் தன் உடலைத் தானே புதுப்பித்துக் கொள்கிறான்.*

*ஆத்ம சாதனத்தில் முன்னேறிய யோகியும் தன் உடலை மறக்கிறான். சாமான்யருக்கு உடலை மறந்த நிலை தூக்கம் எனப்படுகிறது. ஞானியோ தனது நிஜ சொரூபமாகிய ஆத்மாவை முற்றிலும் உணர்கிறான். எனவே அந்த நிலை 'தூங்காத தூக்கம்' எனப்படுகிறது. அது மிக உயர்ந்த நிலை ஆதலால் 'அது தூக்கும்' என உயர்த்திக் கூறப்படுகிறது. அதை அடைவதே வாழ்தலின் குறிக்கோள்.*



பகவான் ஆரம்ப காலத்தில் அண்ணாமலை ஆலயத்தில் தன்னிலே ஆழ்ந்திருக்கும் நிலையில், அன்பர் வந்து 'இந்த பாலசுவாமி' உணவு எதுவும் உட்கொள்ளாமல் இப்படியே அமர்ந்திருக்கிறதே என்று எண்ணி, அவர் வாயைத் திறந்து உண்ண வைப்பார்கள். மறுநாள் வந்து பார்த்தால் அந்த உணவு உண்ணப்படாமல், அப்படியே வாயில் இருக்கும். இது அறிதுயில் நிலையின் ஆன்மிக வெளிப்பாடு. இதுவே பரமானந்த நிலை.

படிப்புஅற்றுக் கேள்விஅற்றுப் பற்றும்அற்றுச் சிந்தைத்
துடிப்பு அற்றார்க்கு அன்றோ சுகம்காண் பராபரமே
– (பராபரக் கண்ணி, 243)

*A learned ignorance is the end of philosophy and the beginning of religion* என்று ஹேமில்டன் என்ற அறிஞர் கூறுகிறார்.

கற்க வேண்டியவை எல்லாம் கற்றபிறகு கற்றவை எல்லாம் மனதிலிருந்து ஒதுக்கித் தள்ளி, மனத்தை முற்றும் எண்ணம் அற்றதாகச் செய்யும்போது மட்டுமே அது ஆத்ம சாதனத்திற்குத் தகுதி உள்ளதாக ஆகிறது என்பது ஞானசாதனத்தின் அடிப்படை.

தன்னை அறியாது தத்துவங்கள் அத்தனையும்
சொன்னநூற் கோடி தொகைபோயின் ஏது பயன்

என்று முருகனார் பகவானைப் பற்றிப் பாடும் 'திருப்பூவல்லி'யில் கூறுகிறார் அல்லவா?

(சாதகன் படிப்பிலும், கேள்வியிலும் ஈடுபடலாகாது என்பதல்ல இதன் பொருள்). சாதகர்கள் ஆரம்ப காலத்தில் சான்றோரிடம் தொடர்புகொண்டு சாதனை

*சம்பந்தமான ஐயங்களைக் கேட்டுத் தெளிவுபெற வேண்டும்.*

*'பரிப்ரஸ்னேன ஸேவயா' என்று ஞானவழி காட்டும் நூல்கள் கூறுகின்றன. ஞானியரை நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்காதபோது, ஞானியர் அருளிய ஞானநூல்களை முறையாகப் பயின்று வரவேண்டும். இத்தகைய கல்வி எல்லாம் 'நித்யா நித்ய வஸ்து விவேகம்' – நிலையற்றது எது, நிலையானது எது – என்று அறியவும், உலகப் பற்றை நீக்கி ஆசான் மீதுள்ள குருபக்தியை வளர்க்கவும் காலப்போக்கில், கேள்வியையும், நூல்களையுமே நீத்து முழுவதுமாக ஆத்ம சாதனையில் ஈடுபட வேண்டும். சாதனையில் முன்னேற மனத்தின் துடிப்புகள், ஆவல்கள் குறைந்து வருகின்றன. மனத்தினை முழுவதுமாக,அசைவற்ற, மாறாத நிலையில் இருத்துவதே சாதனையின் நோக்கம். இது சித்திக்கும்போது மனம் தானாகவே மாய்ந்து விடுகிறது. முதலில் லயத்தில் அடங்கிய மனம் ஆத்ம விசாரணை தீவிரமாகும்போது முற்றிலும் ஒழிந்துபோகிறது.*

*இலயமு நாசம் இரண்டாம் ஒடுக்கம்*
*இலயித்து உளதுஎழும் உந்தீபற*
*எழாதுஉரு மாய்ந்ததேல் உந்தீபற.*

*– (உபதேச உந்தியார், 13)*

*ஆத்ம சாதனையின் ஆரம்ப காலத்தில் பூஜை, ஜபம், தியானம் போன்றவற்றால், எண்ணங்கள் எழாமல் 'நான்' என்னும் எண்ணம் ஒடுங்கி இருக்கும். அது முற்றிலும் அழிந்துபடாத நிலையில், என்றாவது ஒருநாள் மீண்டும் எழுந்துவிடும். 'இலயித்து உளது எழும்'. ஒரு கிணற்றில் கயிறினால் கட்டப்பட்டு தண்ணீரில் அமிழ்ந்து இருக்கும் பக்கெட் (வாளி) உள்ளும் புறமும் நீரிலேயே இருந்தாலும், கயிற்றின் மறு நுனி வெளியே இருப்பதால், எந்த நேரத்திலும் ஒரு பற்றுதலால் அது*

வெளிவரும். அதுபோன்றே மனமும் வாசனையால் இழுக்கப்பட்டு வெளியே வரும். இப்படி லயத்தில் மூழ்காமல், 'நான் யார்' என்று விசாரிக்கும்போது, மனம் உள்முகப்பட்டு அழிகின்றது.

ஞானியர் உபதேசத்தினை ஆத்ம சாதனையில் தொடக்கத்தில் கேட்டு அறிவதன் பயனைத் தாயுமானவர் கூறுகிறார்.

**கல்எறியப் பாசி கலந்து நன்னீர் காணும் நல்லோர்**
**சொல் உணர்வின் ஞானம் வந்து தோன்றும் பராபரமே**
**– (பராபரக் கண்ணி, 214)**

பருகுவதற்கு உரிய நல்ல குளத்து நீர்மேல் பாசி படர்வது உண்டு. அது பரவி இருப்பதால் கீழே உள்ள நீர் காட்சிக்குத் தெரிவதில்லை. கல்லைவீசி அல்லது கையினால் அலையை உண்டாக்கினால் பாசி ஒருபக்கம் ஒதுங்குகிறது. நல்ல நீரா, கெட்ட நீரா என்பதை பாசி நீங்கியபின் அறிந்து கொள்ளலாம். வெளியே தெரிகின்ற புறவுலகக் காட்சியினை ஒதுக்கித் தள்ளி (கையினால் பாசியை நீக்குவதுபோல், சாதனையால் மனமாசுகளை ஒதுக்கித் தள்ளி) உள்முகமாக மனத்தைச் செலுத்தும்போது, இதயத்தில் இருக்கும் ஆத்ம சந்நிதாக்கு வந்துவிடலாம். ஞானியர் உபதேசமும் இந்த மனப்பாசியை ஒதுக்கித் தள்ள உதவுகிறது.

**கண்டவன் எவன்எனக் கருத்தின்உள்நாட**
**கண்டவன் இன்றிட நின்றது கண்டேன்**
**– (அருணாசல அஷ்டகம், 2)**

வெளிப்பொருளை நோக்கும்போது, அது இறை உருவாகவே இருப்பினும்கூட, இதனைக் காண்பவன் யார் என மனத்தை உள்முகப்படுத்தி விசாரிக்கத் தொடங்கியவுடன் பார்க்கின்றவனாகிய அகந்தை இல்லாமல் போய்விடும் என வழிகாட்டுகிறார் பகவான்.

மனது அசைவுறும் போதெல்லாம், அதனை உள்முகநோக்கிப் பதிக்க வேண்டும்.

*கள்ளாது கட்டுஉணவும், காரியமோ நான் ஒருசொல்*
*கொள்ளாத தோஷம் அன்றோ கூறாய் பராபரமே*
*– (பராபரக் கண்ணி, 308)*

நாம் மாயை வயப்பட்டு, பெரும்பாலான சமயங்களில் உடல் உணர்வு கொண்டவராகவே வாழ்கிறோம். சிலருக்கு மட்டுமே, சிலவேளைவளில் மட்டும் தாற்காலிகமாக ஆத்மஉணர்வு மின்னல் போல் தோன்றி மறையலாம். மனம் ஆத்மாவைவிட்டு விலகுதலையே தாயுமானவர் 'கள்ளாதல்' என்று இங்குக் குறிப்பிடுகிறார்.

மனம் தவறான பாதையில் செல்லாமல் அதை ஒரு கட்டுக்குள் வைக்கும் செயலில் எப்போதும் ஈடுபட வேண்டும் என்கிறார் ஞானியார். ஆத்மசாதகன் சாதனையின் அடிப்படைத் தத்துவத்தை ஆரம்பத்திலேயே தீவிரமாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். இவ்வுண்மையை "நான் ஒரு சொல் கொள்ளாதது தோஷமன்றோ?" என்று தாயுமானவர் கூறுகிறார். இந்த ஒரு சொல் எது? 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' அல்லது 'நான் யார்' என்பதே இந்த அடிப்படை மந்திரச்சொல். இதை விடாமல் பற்றி, அதில் உறுதியுடன் ஈடுபடுபவர்கள் உலகம் தொடர்பான எத்தொல்லை வந்தாலும் அதனால் தாக்கப்பெறார். அப்பர் சுவாமிகளைக் கல்லுடன் கட்டி கடலில் போட்டாலும், சுண்ணாம்புக் காளவாயில் எரித்தாலும் எத்தகைய துன்பம் இழைத்தாலும் அவர் பாதிக்கப்படாமல் இருந்ததன் காரணம் தான் உடல் அல்ல; ஆத்மாவே என்று உணர்ந்து இருந்ததுதான். பதினேழு வயது சிறுவன் வேங்கடராமன் பாதாள லிங்கக் குகையில் மாதக் கணக்கில் ஆத்ம தியானத்தில் இருந்தபோது, உடலின் கீழ்பாகம்

*முழுவதும் பூச்சிகளால் அரிக்கப்பட்டும், எலிகளால் கடிக்கப்பட்டும் ரத்த விளாறாகக் கிடந்தது. அதில் பாதிப்புறாமல் பிராமண சுவாமி 'அஹம் பிரஹ்மாஸ்மி' என்ற உணர்விலேயே இருந்து வந்தார் அல்லவா!*

*கள்ளச் செயல் என்பது என்ன? நம் இதயத்தில் உறைவது பரம்பொருள் என்பதை நூலறிவு வாயிலாகத் தெரிந்து உள்ளது. அப்படியும் பரம்பொருளைப் பொருட்படுத்தாது மறந்திருப்பது கள்ளனுடைய செயலுக்கு நிகராகிறது. தன்னிடம் உள்ள விலைமதிப்பற்ற பொருளை என்னிடம் இல்லை என்று மறைப்பது திருட்டுச் செயல் ஆகிறது. பரம்பொருளைப் புறக்கணிப்பது கள்ளனுடைய செயல் என்கிறார் தாயுமானவர். இனி அப்படிச் செயலாகாது என்கிற கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டேன் என்கிறார் அவர். இறைவனது சாந்நித்தியத்தை இடையறாது இதயத்தில் உணர்க.*

*பகவான் நம்மைத் தானே தேடிவந்து சார்ந்த இறையனுபவத்தை நமது இடையறாது செயல்படும் மனச் சஞ்சரிப்பால் புறக்கணிக்காதீர்கள். இதயத்தில் இடையறாது உணரவேண்டும்.*

*தேடாதுஉற்ற நல்திருஅருள் நிதியம்; அகத்து*
*இயக்கம் தீர்த்துஅருள் அருணாசலா*

*— (அக்ஷரமணமாலை, 49)*

*என்று இந்த மனச் சலிப்பை நீக்குவதற்கும் அவன் அருளை வேண்டுக என்கிறார் பகவான்.*

*மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்*

*பகவான் பணியில் தங்கள்,*

*ராம் மோஹன்*

# ஔவை மூதாட்டியின் அருள் குறள்

ராம்மோஹன்

## 2. உடம்பின் பயன்

அடுத்து ஔவையார் உடம்பின் பயனைக் குறித்துக் கூறுகிறார். உடல் என்பது வெறுக்கத்தக்க ஒன்றா? அல்ல. அதற்குப் பலன் உள்ளது.

1. உடம்பினைப் பெற்ற பயன் ஆவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்.

பொருள்: உடலினைப் பெற்றதன் பயன் ஆவது என்னில் உடம்பில் குடிகொண்டுள்ள உத்தமனாகிய இறைவனை அறிந்து ஒன்றுதலே ஆகும்.

விளக்கம்: ஜீவாத்மாக்களின் உள்ளேயும், புறத்தேயும் இறைவன் பரந்து உள்ளான். அவனை ஆத்ம சாதனையின் மூலம் அறிவதே இந்தப் பிறவியின் மூலம் முடிந்த பயனாகும். இந்தச் சரீரத்தை மாசுநீக்கித் தூய்மைப்படுத்தி, அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்தி இறைவனை அறிந்து ஒன்றுபட வேண்டும். அஃதன்றி, உடலைப் பயனற்றது என்றும், அல்லது தவறான வழியில் செலுத்துவதும் தவறாகும்.

ஆரோக்யமாக உடலை வைத்துக்கொண்டு உயரிய நோக்கத்துடன் செயல்பட வேண்டும். இதனைத் திருமூலர் அழகாகக் கூறுகிறார்:

*உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.*

*– (திருமந்திரம், 717)*

உடலின் சக்தி அழிந்தால், உயிர் ஆற்றலும் அழியும். ஞானம் உறுதியாக அமையாது. உடம்பினை வளர்க்கும் வழியானது, வெறும் சாப்பாடு மட்டும் அல்ல. சாத்விக உணவோடு, யோக சாதனமே உடம்பை வளர்க்கும் உபாயம் என்று அறிந்தோன் அந்தச் சாதனத்தை மேற்கொண்டு சாதனையைச் செய்தோன் இறையருள் பெற்ற தகுதி ஆனவன் ஆனேன்

மேலும் தெளிவாகத் திருமூலர் கூறுகிறார்

*உடம்பினை முன்னம் இழுக்கு என்றுஇருந்தேன்*
*உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்*
*உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று*
*உடம்பினை யான்இருந்து ஓம்புகின் றேனே.*

*– (திருமந்திரம் 718)*

உடம்பினை வெறுத்து ஒதுக்கத் தக்கது என்று தவறாக எண்ணி வந்தேன். ஆழ்ந்து கற்றபின், உடம்பினுள்ளே மிக உயர்ந்த பரமாத்மா இருப்பதை அறிந்து கொண்டேன். சுத்தமான இந்த சாத்விக உடல்-உள்ளத்தினுள்ளே பரமாத்மா குடிகொண்டு உள்ளான் என்று அறிந்து, அதனை மிக்க சிரத்தையுடன் பாதுகாக்கின்றேன் என்கிறார் திருமூலர்.

பாரதியாரும் இதுகுறித்தே 'உடலினை உறுதிசெய்' எனப் புதிய ஆத்திச்சூடியில் கூறுகிறார்.

2. *உணர்வு ஆவதெல்லாம் உடம்பின் பயனே*
*உணர்க உணர்வு உடையார்.*

பொருள்: சரீரம் எடுத்தன் பயன் இறைஉணர்வை உள்ளத்திலே நிலைபெறச் செய்வதாகும். (உடல்

– மனத்தை தூய்மையாக்கியபின்) உள்ளத்திலே இறைஉணர்வு எழுப்பப்பட்டவர்கள், இதனைத் தெரிந்து கொள்வர்.

விளக்கம்: ‘உணர்க உணர்வு உடையோர்’ என்ற சொற்றொடருக்கு யாருக்கு இறைஉணர்வு எழுப்பப்படுகிறதோ அவர்களே மெய்யறிவு உடையவர்கள் ஆவர். யாருக்கு மெய்யறிவு உள்ளதோ அவர்களே பரமாத்மாவை அறிவார்கள். அப்போது சரீர உணர்ச்சியே ஆன்ம உணர்ச்சியாய் பரிணமிக்கிறது.

ஊன்உடை ஆழி உத்தமர்க்கு என்று
உன்னித்து எழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கு என்று பேச்சுபடில்
வாழகில்லேன் கண்டாய்.

என்று ஆண்டாள் நாச்சியார் திருமொழியில் பாடுகிறார். ஆத்ம சாதனையின் முதற்படி, உடம்பினை வலுவாக்கி, அதனை ஆத்மசாதனக் கருவியாக்குதல். பின்னர் ஆழ்மனத்தில் இறைஉணர்வை அமரச் செய்தல். பின்னர் நமது உடல், மனக் கருவிகள் அனைத்தும் பரமாத்மாவை அறிந்து உணரவே உள்ளன என்பதை அறிதல். இதுவே உடல் – உள்ளத்தின் நிலைப்பாட்டின் அடிப்படை.

3. ஒரு பயன்ஆவது உடம்பின் பயனே
தருபயனாம் சங்கரனைச் சார்.

பொருள்: இந்த உடம்பின் பயனே நமக்கு ஆத்ம சாதனமாக, இறைவனை உணரும் கருவியாகப் பயன்படுதல் ஆகும். அந்தச் சிவபெருமானையே சார்ந்து நமது சாதனைகள் இருக்கும்போது, அந்தச் சாதனையின் பயனை சிவபிரான் அருளுகிறார்.

விளக்கம்: ‘ஒரு பயன்’ என்றால் நிகரற்ற பயன் என்பது பொருள். யார் இறைவனைத் தூய்மையான மனத்துடன் தேடுகின்றானோ அவனிடம் பரமாத்மா

தானே வந்து; தன்னை அறியச் செய்கிறது என்கிற வேதாந்தக் கருத்தை ஔவையார் இங்கே எடுத்து உரைக்கிறார்.

*நாயமாத்மா ப்ரவசனேன லப்4ய:*
*ந மேத4யா ந ப3ஹுனா ஸ்ருதேன*
*யமே வைஷ வ்ருணுதே தேன நப்4ய:*
*தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தனூம் ஸ்வாம்*

*– (கட உபநிஷதம், II.23)*

இந்தப் பரமாத்மா வேதப் படிப்பினாலோ, அறிவின் திறத்தினாலோ, அன்றி பல பிரசங்கங்களைக் கேட்பதாலேயோ அறியப் படுவதில்லை. எவன் தன்னை உள்ளார்ந்த உணர்வுடன் தேடுகின்றானோ, அவனாலேயே அது அறியப்படுகிறது. அவனுக்கே ஆத்மா தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறது.

‘தேடுதல்’ என்றால் என்ன? நம் உள்ளும் புறமும் இருக்கும் அழுக்குகளை எல்லாம் நீக்கவேண்டும். சுயநலம், ஆணவம், பொறாமை, பேராசை இவை அனைத்தும் அழுக்குகள். இவற்றை நீக்கி மனம் தூய்மைப்படின் பரமாத்மா தானே வந்து அடைகிறது.

அருணகிரி நாதரும் கந்தர் அலங்காரத்தில்

*தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத்*
*தானமென்றும் இடுங்கோள்; இருந்தபடி இருங்கோள்*
*‘அருள்வந்து தானே வெளிப்படுமே’.*

*– (கந்தர் அலங்காரம் 16)*

என்று அறுதியிட்டுக் கூறுகிறார்

4. பிறப்பினால் பெற்ற பயன் ஆவது எல்லாம்
   தூநெறிக் கண் சென்று.

பொருள்: இப்பிறவி எடுத்ததன் நோக்கம் என்ன எனில், உயர்ந்த தூய்மையான ஆத்மிக வழியினைப் பின்பற்றி, சகல விதமான பற்றுக்களையும்

அகந்தையையும் விட்டு ஒழித்து ஆத்ம சாட்சாத்காரம் பெறுவதாம்.

விளக்கம்:

துர்லப4ம் த்ரயமேவ தத் தெய்வாநுக்3ரஹ ஹேதகம்
மநுஷ்யத்வம் முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸங்க்3ரஹம்

என பகவத்பாதர் கூறுகிறார். "உலகில் கிடைத்தற்கரியது மூன்று. பகுத்தறிவுள்ள மனித ஜன்மம் எடுப்பது; இப்பிறவியில் இறைவனை உணர வேண்டும் என்ற ஆவல் மீதூறுவது; இதற்கு வழிகாட்டும் ஞானிகளைத் துணையாய்க் கொள்ளும் பாக்யம் அடைவது." இத்தகைய அரிய மானிடப் பிறவியின் பயனாவது, உலகத் தொடர்பான ஆசைகளையும், வாசனைகளையும் துறந்து தூய மார்க்கத்தில் சென்று இறையருள் பெற, நம்மைத் தகுதிஆக்கிக் கொள்ளுதலே என்கிறார் ஔவையார்.

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி
யாதினும் அரிது அரிது
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்.

என எச்சரிக்கிறார் தாயுமானவர். இப்பிறவி இருக்கும்போதே தீநெறி துறந்து தூயநெறியினைப் பின்பற்ற வேண்டும்.

5. உடம்பினால் அன்றி உணர்வுதான் இல்லை
உடம்பினால் உன்னியதே ஆம்.

பொருள்: உடம்பினில் ஏற்படும் தாக்கங்களைப் பின்பற்றியே உணர்ச்சிகள் உண்டாகின்றன. இந்த உணர்ச்சிகளைப் பின்பற்றி மனதில் நினைவுகளும், உணர்வுகளும் உண்டாகின்றன.

6. மாசுஅற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு.

*பொருள்: மனத்தில் மாசுநீங்கிய உயர்ந்த நிலையைப் பெற்றால், பரிசுத்தமான அம்மனத்தின் பாற்பட்டு, சரீரத்தில் இறைஉணர்வு முகிழ்க்கிறது.*

*விளக்கம்: (குறள் 5 மற்றும் 6)*

*உணர்ச்சிகள், சரீரத்தின் தாக்கத்தின் ஏற்படுவதால் 'உடம்பினால் உன்னியது' என்று கூறிய ஔவை, மனதிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைக் கூறுகிறார். மாயையில் கட்டுண்ட உடல், பல்வேறு தூய்மையற்றவற்றில் ஈடுபட்டுள்ளதால் மனதில் விருப்பு வெறுப்புகள் எழுந்து, மனத்தின் தூய்மை கெடுகிறது. உடல், உள்ளத்தைத் தூய்மை ஆக்கினால் அச்சரீரமே இறைவனின் திருக்கோயில் ஆகிறது.*

*உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனைக்*
*கள்ளத்தின் ஆகும் கலந்து அறிவார் இல்லை*
*– (திருமந்திரம் 407)*

*உயிர் உணர்வால் உணரப்படும் இறைவனை வெளியே ஆரவாரத்தால் அறிய முடியாது.*

*உள்ளம் பெருங்கோயில்; ஊன்உடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானுக்கு வாய்கோபுர வாயில்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலன் ஐந்தும் காள்அம் மணிவிளக்கே.*

*ஞானிகளுக்கு அவர்தம் உள்ளமே கர்ப்பக் கிருஹம். உடம்பே இறைவன் உயிரும் திருக்கோயில். அஞ்ஞானியின் திருவாயே கோபுர வாசல். அவரது உயிரே சிவலிங்கம். ஐந்து புலன்கள் ஆகிய ஐந்தலை நாகம், தூய்மைப்பட்ட உடல்-உடம்புடன் செய்யும் சாதனையால் பரிணாமம் அடைந்து ஆத்மாவிற்கு ஒளியூட்டும் ஒளிவிளக்குகள் ஆகின்றன.*

*பகவானும் இக்கருத்தினை உபதேச உந்தியாரில் உரைக்கின்றார்.*

*உளமும் உயிரும் உணர்வும் செயலும்*
*உளவாம் கிளைஇரண்டு உந்தீபற*
*ஒன்றவற்றின் மூலம் உந்தீபற.*

*– (உந்தியார் 12)*

மனமும் பிராணனும் இவையிரண்டும் ஒன்றாய்த் தோன்றி ஒன்றாய் அடங்குகின்றன. மனமானது நினைப்பாகவும், பிராணனானது ஜீவனின் செயலாகவும் இரண்டு கிளைகள்போல் இயங்குகின்றன. இவையிரண்டிற்கும் மூலம் ஆத்மாவே. மனத்தினை அடக்கும் உபாயம் தூய எண்ணங்களும், தூய சிந்தையும், தூய நோக்கமும் ஆகும். அத் தூய்மை நிலையில், உடலே இறைவனின் கோயிலாகிறது என்பதை ஔவையார் இவ்விரு குறட்களில் கூறுகிறார்.

7. *ஓசை உணர்வுகள் எல்லாம் தருவிக்கும்*
*நேசத்தால் ஆய உடம்பு.*

பொருள்: (சப்தம், தொடுஉணர்ச்சி, பௌதிக உருவம், சுவை, வாசனை ஆகிய) ஐந்து உடல் உணர்ச்சிகளும் அடிப்படை ஆசையான பெண்-ஆண் விருப்பத்தால் உடம்பில் உருவாகின்றன.

விளக்கம்: எல்லா உணர்ச்சிகளுக்கும் அடிப்படை, நாம் இன்பமாய் இருக்கவேண்டும் என்ற ஆசை. எல்லா ஆசைகட்கும் அடிப்படை ஆசை, இயற்கையால் ஏற்பட்ட ஆண்-பெண் வேறுபாட்டால் ஏற்படும் இன்ப உணர்ச்சியில் எழும் விருப்பம்.

8. *உயிர்க்கு உறுதிஎல்லாம் உடம்பின் பயனே*
*அயிர்ப்பு இன்றி ஆதியை நாடு*

பொருள்: (ஆரோக்யமான) உடல்தான் ஆத்ம சாதனத்திற்கு உறுதியைத் தருவது. ஆதலால், ஐயம் ஏதும் இன்றி, உடலையே ஆதாரமாகக் கொண்டு இறைவனை அடையும் வழியை நாடுவாய்.

*விளக்கம்: முன்பு திருமூலர் கூறியதைப் பார்த்தோம்.*

*"உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே". ஆரோக்யமான உடல் இல்லையேல், உயிர்க்கும் உயிரான இறைவனைத் தேடும் சாதனையில் ஈடுபட இயலாது. எனவே தூய உடலைக் கொண்ட இறைவனை நாடுக என்கிறார் ஔவையார்.*

*திருமூலரும் கூறுகிறார்:*

*முதல்கிழங்காய் முளையாய் முளைப்பின்*
*அதன் புதலாய்ப் பலமாய் நின்று அளிக்கும்*
*அதற்கு அதுவாய் இன்பம் ஆவதுபோல்*
*அதற்கு அதுவாய் நிற்கும் ஆதிபிரானே*

*– (திருமந்திரம் 154)*

*பெரிய மரத்தின் தோற்றம் முதலில் முளையாய், பின்னர் செடியாய், பின்னர் மரமாய், பின்னர் பழமாய் வெவ்வேறு விதமாய் இன்பம் தருகிறது. அந்த இன்பம் அதன் முளையிலேயே உள்ளது. அதுபோல உயிருக்குப் பயனாகிய இன்பமாக இறைவன் இவ்வுயிரின் உள்ளும், உடலின் உள்ளும், அந்தர்யாமி ஆக உள்ளான். வேறு பயனை வெளியே தேடவேண்டாம் என்கிறார் திருமூலர்.*

*தேனுக்குள் இன்பம் செறிந்து இருந்தாற்போலே*
*ஊனுக்குள் ஈசன் உறைந்து இருந்தானே.*

*9. உடம்பினால் பெற்ற பயன் ஆவதெல்லாம்*
*திடம்பட ஈசனைத் தேடு.*

*பொருள்: இந்த உடல் எடுத்ததின் நோக்கமே, உறுதியாக உள்ளே ஈசனைத் தேடி அறிவதாகும்.*

*10. அன்னத்தால் ஆயஉடம்பின் பயன் எல்லாம்*
*முன்னோனைக் காட்டி விடும்.*

பொருள்: அன்னத்தால் ஆக்கப்பட்ட இந்த சரீரத்தின் பயன் ஆவது, அனைத்திற்கும் முதல்வனான இறைவனை ஆத்மாவுக்கு அறிவித்தல் ஆகும்.

விளக்கம்: உடலின் ஐந்து கோசங்களைக் கூறும்போது, அனைத்தும் ஆரம்பமான கோசமாக 'அன்னமய கோசம்' – அன்னத்தினால் ஆன – உடல் அமைப்பு கூறப்படுகின்றது.

*அன்னத்தால் அறைந்திட்ட வீடு,*
*அன்னம் ஒடுங்கினால் அதுவே சுடுகாடு.*

என்பது பழம்பாடல். அன்னத்தினால்தான் சரீரம் ஜீவித்து இருக்கும். சரீரம் பலத்துடன் இருந்தால் அன்றி, ஆத்ம சாதனை செய்யல் இயலாது. எனவே அன்னமே ஆதாரம் என்கிறார் ஔவையார்.

கௌதம புத்தர் கபில வஸ்துவை விட்டு நீங்கி, பினனர் உருவேலா வனத்தில் அங்கிருந்த கடும் தவசியர் கூறியபடி உணவும், நீரும் இன்றி ஆறு ஆண்டுகள் உக்கிரமான தவம் செய்தார். உடல் வற்றி, எலும்பும் தோலுமாய் ஆகி, சக்தியெலாம் போனதே தவிர ஆத்ம சாட்சாத்காரம் வரவில்லை. எனவே இத்தகைய பட்டினித் தவத்தால் பயன் ஏதுமில்லை என்று அறிந்து, பின்னர் உடலைப் பேணி, மூன்று நாட்கள் போதிமரத்தின் அடியிலே 'நான் யார்' என்ற உள்தேடலில் மூழ்கியபோது ஞானம் வந்துற்றது. இதனை இப்பாடலில் ஔவையார் உணர்த்துகிறார்.

# ஞானத் திறவுகோல்

### சு. பரமேஸ்வரன் கோவை

மனித உடலிலே இரண்டு இயக்கு சக்திகள் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன அவை நமது கட்டுப்பாட்டில் இல்லை. தூலமாய் வெளியேறுவது மூச்சுக் காற்று; சூக்குமமாய் உள்ளிருந்து இயங்குவது மனம். தமிழ் சித்தர்கள் இதனைப் பேசும் எழுத்து என்றும் பேசா எழுத்தெனவும் பரிபாஷையில் குறிப்பிடுவர்.

பேசாவெழுத்துடன் பேசுமெழுத்துறில்
ஆசான் பரந்தியாம். (அவ்வைக்குறள்)

வீடு பேறு பெற்று தன்னையறிய என எப்பெயர் இட்டாலும் அதை அறிந்து உணர இவையிரண்டுமே திறவு கோலாக உள்ளன. புறத்தில் உள்ள பிராணன் எனும் உயிர்ச்சக்தி நமது நாசித்துவாரங்களில் உட்சென்றவுடன் மூச்சு, சுவாசம் எனப்படுகிறது. சித்தர்கள் இந்த சுவாச கதியை சரம் என அழைப்பர்.

சரம் பார்ப்போன் பரம்பார்ப்பான் என்பது சித்தர் மொழி. சரம் என்பது, மாட்டிற்கு பூட்டியுள்ள மூக்கணாங் கயிறு போன்றது. மாடு எப்படி மூக்கணாங் கயிற்றால் இயக்கப்படுகிறதோ அதுபோல் பாவம் புண்ணியம், நன்மை தீமை என்ற செயல்கள் யாவும் சூரியகலை, சந்திரகலை எனும் சர இயக்கத்தினால் செயல்படுகின்றன என்பதையே, மாணிக்கவாசகர் அறம் பாவம் எனும் அருங்கயிற்றால் கட்டி

என்றார். சரத்தை அடிப்படையாகக் கொண்டு பல யோகசூத்திரங்கள் எழுதப்பட்டன. சித்தர்களும், ஞானிகளும் மூச்சிற்கும் ஞானத்திற்கும் உள்ள தொடர்பை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நன்கு அறிந்திருந்தார்கள். இஸ்லாமிய சூஃபிகளும், புத்தரும் இதனை அறிந்திருந்தார்கள்; தன்னை அறிதல் என்ற கோட்பாட்டில், இயல்பாய் நாசியில் ஓடிக்கொண்டிருக்கும் சரத்தை நமது கவனத்திற்குக் கொண்டு வருவதுதான் முதல் நிலையாகும். ஆக ஞானத்தின் திறவுகோல் நம்மிடமே உள்ளது.

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணம்

இங்கே ஒன்றைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும், இன்று பரவலாக அறிந்த ப்ரணாயாமம் என்ற மூச்சுப்பயிற்சிக்கும் வாசியோகம் என்பதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

நமது சுவாசகதிக்கும், மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு; அவைகளின் பிறப்பிடம் ஒன்றேதான். மனதின் செயல்களுக்கும் பிராணனின் நடைக்கும் தொடர்பு இருக்கிறது. அமைதியாக ஓரிடத்தில் அமர்ந்து, சித்தத்தைச் சாந்தமாய் வைத்துக்கொண்டு, உள்ளும், புறமுமாய் ஓடும் சுவாச கதியை கவனித்து வர, வர அவைகள் மெல்ல, மெல்ல தீர்க்கமாய் மூச்சடங்கும் காலம் அதிகமாகிக் கொண்டேபோகும். ஆரம்ப நிலையில் அவை நமது கட்டுக்குள் இல்லாமல் இருந்தாலும், தொடர்ந்த பயிற்சியினால் மனம்அடங்கி நிஜமான சாந்தம் உண்டாவதை உணரலாம் தூலமான சுவாச கதியை கவனிக்க, கவனிக்க எண்ணங்கள் தோன்றி மறைவதை உணரமுடியும். தோன்றும் எண்ணங்கள் யாருக்கு என விசாரிக்கலாம். சரம், மனதின் உற்பத்தி ஸ்தானத்தை நாடி நிற்பதையே ரமணர்,

உதித்த இடத்தில் ஒடுங்கியிருத்தலே;
பக்தியும், கர்மமு; உந்திபற
அது யோகமும், ஞானமும் உந்திபற

என்றார்.

மனம் நசிந்த இடமே பரமபதம். மனம் பலவற்றைத் தானே கற்பித்துக் கொள்ளுகிறது. சதா, நினைந்து நினைந்து துன்பத்தை அடைகிறது. நினைவுகள் யாவும் இறந்த காலம், எதிர்காலத்தைப் பற்றியே உள்ளது. காலம்தான் துக்கம் (psychological time) கடந்த, எதிர்காலத்தைப் பற்றியதே துக்கம் இன்பத்திற்கு எதிரானது காலம். கடந்த காலத்தில் இப்படி இருந்தேன் என எண்ணும்போது, நாம், நம்மையே அறியப்படும் பொருளாக (object) பார்க்கிறோம். எதிர்காலத்தில் இப்படி இருப்பேன் என எண்ணுகையில் ஏதோ ஒரு பொருளை இப்படி ஆக்குவேன் எனக் கூறுவதுபோல் உள்ளது. இப்படியெல்லாம் நினைப்பவன் எவனோ அவன் இப்போதும் இருக்கிறான். அவன் யார்? நம் வாழ்வில் ஒரு கணப் பொழுதாகிலும் அந்த அடிப்படையான கேள்வியை எண்ணிப் பார்ப்பதே இல்லை. விசாரம் என்றால் துக்கம் என்றும், விசாரணை என்றும் பொருள். கோர்ட்டிலே வழக்கு ஒன்று இருந்தால்; விசாரணை என்றைக்கு என்று கேட்போம்; அது எப்போதும் வாய்தாவாகவே இருக்கும். நமது ஜென்ம துக்க நிவர்த்திக்கு விசாரணை என்ற அடிப்படையான கேள்வியை எப்போது கேட்பது என்றால் அதுவும் எப்போதும் வாய்தாவாகவே இருக்கும்.

ஒருபொழுதும் வாழ்வது அறியார்கருதுக்
கோடியும் அல்லபல

என்ற குறட்பாவின் நெறிப்படி, வாழ்வின் நிகழ்கால அனுபவமே, தன் இருப்பை அறிவதற்கான சரியான தருணம். அன்பர் சிவப்பிரகாசர்தான் முதன்முதலில்

ரமணபகவானிடம் நான் யார் என்ற கேள்வியைக் கேட்டார். சிவப்பிரகாசம் பிள்ளை அவர்களை கட உபநிஷத்தில் வரும் நசிகேதனாகப் பார்க்கிறேன். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மரணத்தைப் பற்றிய உண்மைகளை எமனிடம் நசிகேதன் கேட்ட கேள்வியும், பதிலுமே கட உபநிஷதம் ஆகும். விருபாட்ச குகையில் மோன தவத்திலிருந்த ரமண சந்நிதியில் சிவப்பிரகாசர் சில அதிசய காட்சிகளைத் தொடர்ந்து சில தினங்களில் கண்டார். சிவப்பிரகாசர் மெய்யியல் படித்தவர் சிவபக்தரான அவருக்கு, ரமணர் காலாரி மூர்த்தியாக தோன்றியிருக்கவேண்டும். எனவேதான் மனஇறப்பிற்கான அடிப்படைக் கேள்வியான நான் யார்? என்ற வினாவைக் கேட்டார். இதைத்தொடர்ந்து அவர் எழுப்பிய வினாக்களும், ரமணரின் பதிலுமே ரமண உபநிடதமானது.

செத்துப் பார்த்தால் சிவனை அறிவாய்,
ஒத்துப் பார்த்தால் ஈசன் ஆசானை அறிவாய்,
அன்று செத்துப் பார்த்தான் ரமணன் பின்
சித்தாதி சித்தர்கள் வணங்க அருணையில் நின்றானே

ரமணர் அளித்த பதிலே பிற்காலத்தில் தம்மை அண்டியவர்களுக்கு ஞான உபதேசமாக அமைந்தது. மனதில் எண்ணங்கள் எழுந்ததும் அது யாருக்கு எழுந்தது என்பதுதான் அடிப்படைக் கேள்வியாகும். இதை விட்டு சுவர்க்கம், நரகம், மறுபிறப்பு, இறைவன் உண்டா? இல்லையா? என்பதெல்லாம் வாழ்வின் அடிப்படைக் கேள்வியும் அல்ல, அதனால் எந்தப் பயனும் இல்லை. நான் எப்போதும் நான் என்னவாகப் பார்க்கப்படுகிறேன் அல்லது பார்க்கப்படவேண்டும் என்பதையே மையமாகக் கொள்கிறது. மனிதனுள் உள்ள நான் என்பது யார்? அது எங்கிருந்து கிளம்புகிறது? இதன் இயக்கு சக்தி, ரூபம் தளம், தற்காப்பு எப்படி நிகழ்கிறது? என்பது தான் சரியான, அடிப்படையான கேள்வியாகும். அந்த அடிப்படையான கேள்விக்குப் பதில் எதுவும் இல்லை.

மோனமே பதிலாகிறது, கேள்வியே பதிலாகிறது. கேள்வியும், விடையும் உள்ளபடி உணர்ந்தபின் அதை சொல்லால் விளக்க முடியாது. இது ஒவ்வொருவருடைய குல சொத்து, யாவருக்கும் அதை அடைய உரிமையுண்டு. ஆன்ம விசாரம் என்பது தியானம் என்பதிலும் முற்றிலும் வேறுபட்டது. விசாரத்தில் தியானியை விசாரித்து நாடி நிற்பதாகும். உணர்வாய் உள்ள இடத்தில் வெற்றி தோல்வி என்பது இல்லை. அகந்தைக்கே வெற்றி தோல்வியெல்லாம். தன்னை விசாரிக்கும் கலையே விண்ஞானம், மற்றவையெல்லாம் மண்ஞானம்;. மனம் இறப்பதற்கே தியானம், விசாரணை எல்லாம்.

பிராணனும் மனமும் ஒன்றை அடக்க மற்றதும் தானே அடங்கும். இந்தப் பூத உடலே ஞானத்திற்கும் அறியாமைக்கும் இடையே உள்ள நீண்ட சுவராக உள்ளது. தேகத்தை விடுத்து தேகியாகக் காண்பது அறிவு. உண்மைத் தியானம் ஒன்றே ஒன்று தான், புதிதாக எதுவும் கற்கத் தேவையில்லை. ஆனந்தம், அனந்தம் இரண்டு ஒன்றே. அனந்தம் என்பது முழுமை

பூர்ணத்திலிருந்து தான் எல்லா உயிரினங்களும் பிறக்கின்றன. ரமண பகவானின் ஸ்திதப்ரக்ஞனாக, அருளே உருவமாக 54 ஆண்டுகள் தூலதேகத்தில் மலை மீதும், குகைகளிலும். அருணை மலை அடிவாரத்திலும் ஆனந்த நர்தமிடும் கருணாகரக் கடவுளாகவே காட்சியளித்தார். விளக்கிலிருந்து ஒளிபரவுகிறது. ஊதுபத்தியிலிருந்து நறுமணம் பரவுவதுபோல் அவரிடமிருந்து அன்பு, அமைதி, அருள் எங்கும் பரவியது. சந்தேகம் எனும் இருள்தேகமுடையவர்கள், மெத்தப் படித்த அறிஞர்கள், அவரிடம் கேள்விக் கணைகளைத் தொடுத்தனர், அவர்இரண்டொரு வார்த்தைகளில் சொல்ல வேண்டியவற்றை அன்போடு கூறுவார். எப்போதும் மோனத்திலே இருப்பார். பலருக்கும் அறிவு துலங்கியது, யாரும் சாந்தியை உணர்ந்தார்கள். ரமணர்செய்ததுதான் என்ன?

*வாக்கிறந்த பூரணமாய், எல்லாமாய்,*
*அல்லவுமாய், இருந்தனை இருந்தபடி, இருந்து காட்டி*
*சொல்லாமலே சொல்லி அருள் மோனத்தில் இருப்பார்.*
*இருள் விலகுகிறது அறியாமை அகன்றது,*
*தெளிவுபெற்றவர்கள் அநேகர்.*

ஆன்ம பக்குவிகளான சுவாமி ராமதாஸ், பாபாஜி, சுவாமி ராமா, பால் பிரண்டன், மௌனி சாது போன்றோர் அனுபூதி நிலையை அவரது தெய்வ சந்நிதானத்திலேயே உணர்ந்தனர். விஞ்ஞான அறிவு வளர்ந்து பகுத்தறிவு மிகுந்துவரும் இக்காலத்தில், அதுபோன்ற ஞான அருள் மரபு வாழ்வதற்குப் பதில் மெல்ல, மெல்ல மறைந்து வருவது கவலைக்குரியது.

ரமணர் வாழ்ந்து காட்டிய வழிமுறை இந்திய மரபுக்கு உட்பட்டதும் அல்ல எதிரானதும் அல்ல. மானுட ஞானங்கள் யாவும் ரமண வழியில் சங்கமித்தது என்றால் மிகையாகாது. பொருள் ஈட்டவோ, உடல் உபாதையை போக்கக்கூடிய உத்திகளைக் கேட்பதற்கு அவரிடம் போய் கேட்கவேண்டியதில்லை. ரமணர் எதையும் புதிதாகக் கற்பிக்கவில்லை. உலக சஞ்சாரக் கனவுகளிலிருந்து விழிப்படைவதற்கான வழிகளையே கூறினார். கற்றதை எல்லாம் சிதறடித்தார். சுயத்தை, இருப்பை அறிய வழி காட்டினார்.

ரமண பகவான் காட்டிய வழி எளிமையானது, ஆபத்து எதுவும் இல்லாதது. உடல் உழைப்போ, பொருள் செலவோ இல்லாதது. எங்கு எப்போது வேண்டுமானாலும் சாதகம் செய்யலாம். வாழ்வின் அனைத்துத் துன்பங்களுக்கும் காரணமான அறியாமையை அகற்றுவோம், பேரின்ப நிலையாகிய ஞானத்தை உணரமுயலுவோம். ஆர்வமும், முயற்சியுமே விசாரம் பிறப்பதற்குக் காரணம். ரமணரின் அருள் மழையில் நனைந்து, திளைத்து, எண்ணங்களின் மூலத்தை நாடி நிற்க, உழைப்பிற்கு ஏற்ற பலன் கிட்டும்.

ஆர்வலர் அறிவார் அரனை என்பது திருமூலர் வாக்கு. சிந்தனை எனும் சிற்றடியை விட்டு நாளும் ஒரு கணமேனும் விசாரம் என்ற உள்முக புனிதப் பயணத்தை மேற்கொள்வோமாக.

மோனகுரு அளித்த மோனமே ஆனந்தம்
ஞானம் அருளும் அது, நானும் அது, வான் ஆதி
நின்ற நிலையும் அது, நெஞ்சப் பிறப்பும் அது
என்ற அறிந்தேன் ஆனந்தமே.

தானம், தருமம் தழைத்தகுரு மானமொடு தாய்எனவும் வந்து என்னைத் தந்த குரு என் சிந்தை கோயில் என வாழும் ரமணகுரு வாழி வாழியவே.

# இனிவரும் திருநாட்கள்
## 2018

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி | 03 | புதன் | ஸ்ரீபகவான் 138ஆவது ஜயந்தி |
| | 14 | ஞாயிறு | பொங்கல் |
| | 31 | புதன் | சின்னஸ்வாமிகள் ஆராதனை |
| பிப்ரவரி | 13 | செவ்வாய் | மஹா சிவராத்திரி |
| மார்ச் | 6 | செவ்வாய் | சுந்தரம் ஐயர் தினம் |
| | 16 | வெள்ளி | ஸ்ரீவித்யா ஹோமம் |
| | 18 | ஞாயிறு | தெலுங்கு வருடப் பிறப்பு |
| | 25 | ஞாயிறு | ஸ்ரீராமநவமி |

மேற்கண்ட விழா நிகழ்வுகளின் மாற்றங்களை அறிய ஆச்ரம இணையதளம் *www.sriramanamaharshi.org* பார்க்கவும்.

# அக்ஷர மணமாலை ஒரு தத்துவக் கருவூலம்

**டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்**

**பகுதி-9**

*பரமனின் பாதத்தைப் பற்ற இந்திய சித்தாந்தங்கள் கர்மம், பக்தி, ஞானம், சரணாகதி எனப் பல மார்க்கங்களை நமக்கு அளிக்கின்றன. இவை தனித்தனியே பார்க்கும்போது மாறுபட்டவை போலத் தோற்றமளித்தாலும் அடிப்படையில் ஒரே நோக்கம் கொண்டவை. சாதகனின் மனதைப் பக்குவப்படுத்தி, அவனை மோக்ஷ மார்க்கத்தில் அழைத்துச் செல்வதே இவற்றின் பயன். வேதாந்தம் எனப்படும் ஞான மார்க்கத்தின் மூலமாக அரிய கருத்துகளைக் கூறிய ஆன்றோர்கள் பலர், நாயகிநாயக பாவத்தையும் அவலம்பித்து, பக்தி வழியை மக்களுக்கு வழங்கினர். இதை மதுர பாவம் எனவும் குறிப்பிடுவார்கள். இந்த உறவு மற்ற மார்க்கங்களைவிட உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. இதற்கு நுட்பமான ஒரு காரணம் உண்டு.*

*மனித குணங்கள் அடிப்படையாக ஆண்மை, பெண்மை என இரு வகைப்படும். ஆண்மை என்பது வீரம், வலிமை, கொடை போன்ற குணங்களைக் கொண்டது. இது போல பெண்மை குணம் உணர்ச்சி, நளினம், அன்பு என்னும் பண்புகளின் உறைவிடம். எல்லா மனிதரிடமும் இந்த இரு குணங்களின் வெளிப்பாடு காணப்படும். பொதுவாக ஆண்களிடம் ஆண்மையும் பெண்களிடம் பெண்மை குணமும் அதிகமாகக் காண்பது கண்கூடு. தன்னுடைய உடல் பொருள் ஆவி இவை அனைத்தையும் மற்றவரிடம்*



இழப்பது பெண்மையின் சுபாவம். ஆண்கள் அதிகமாக சுய சிந்தனை உடையவர்களாதலால் தன்னை இழத்தல் என்பது எளிதில் அவர்களுக்குக் கைவருவதில்லை. ஆனால் இறைவன்பால் சித்தத்தை முழுவதும் வைத்தவர்கள் அவனையே நாயகனாக உணர்கிறார்கள். அந்த உறவில் காதல் வயப்படுகின்றனர். இந்நிலையில் அவர்கள் தங்களை நாயகியாகவும் இறைவனையே நாயகனாகவும் உணர்கிறார்கள். மானுஷ்யமான ஆண்பெண் என்னும் உடல் ரீதியான உறவு நீங்கி தெய்வீகமான பக்தி பாவம் அவர்களைத் தன் வயப் படுத்துகிறது. இதில் ஊடலும்கூடலும், சேர்க்கையும் பிரிவும் முக்கிய அம்சங்களாகின்றன. இதற்கு சித்தாந்த வடிவில் ஒரு விளக்கம் பார்க்க முடிகிறது. உலகில் இறைவன் ஒருவனே புருஷன்; மற்ற அனைவரும் பெண்டிரே என்னும் உறவு நம்மை சரணாகதி மார்க்கத்தில் முன்னேற உதவுகிறது. இந்தத் தத்துவமே

வைஷ்ணவத்தில் அதிகமாக வலியுறுத்தப் படுகிறது. நான் அசக்தன் என்னும் எண்ணம் ஆணவத்தை அழிக்கப் பெரிதும் உதவி புரிகிறது.

இந்த சித்தாந்தம் தத்துவம், பக்தி ஆகிய இரு வழிகளுக்கும் நல்லதொரு பாலமாக அமைகிறது. விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் தூண்களில் முக்கியமான ஒருவர் நம்மாழ்வார். இவர் பாடல்களில் வேதாந்தக் கருத்துகள் விரவிக் காணப்படும். இவர் அருளிய திருவாய்மொழி என்னும் பிரபந்தம் சாம வேத்த்தின் சாரமாகவே கருதப் படுகிறது. ஆயினும் இவர் இறைவன்பால் மாறாக் காதல் கொண்டு விரக தாபத்தால் தவிக்கிறார். அதனால் இவருக்கு பராங்குச நாச்சியார் என்னும் பெயரும் உண்டு. இதே போல நாயகி பாவத்தை அடைந்த மற்றவர் திருமங்கை ஆழ்வார். இவர் பரகால நாச்சியார் என்று அழைக்கப் படுகிறார். இவர்களிடமிருந்து சற்றே மாறுபட்டவர் ஆண்டாள். வேதாந்தத்தை அவர் நேரிடையாக எந்த பாசுரங்களிலும் பாடவில்லை. அவர் இயற்றிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்னும் இரு நூல்களிலும் நாயகிநாயக பாவமே விரவி வருகிறது. இந்த வகை இலக்கியங்களில் திருப்பாவைக்குத் தனியிடம் உண்டு. ஒரு பெண், பரமனிடம் காதல் வயப் பட்டு, தன் உணர்வை வெளிப்படுத்தும்போது அதில் இருக்கும் சுவையே அலாதி. அதை ஒரு பெண்ணே வெளிப்படுத்தும் போது, அதில் மதுர பாவத்தின் பரிபூரணத்தைக் காண முடிகிறது. ஆனால் ஆண்டாளின் பாசுரங்களிலும் வேதாந்தமும் மிக எளிய முறையில் கூறப்படுகிறது என்பது கவனிக்கத் தக்கது.

பாவை நோன்பு நோற்க ஆயர்பாடிப் பெண்டிர் கூடி இறைவன் புகழ் பாடுவதே திருப்பாவையின் நோக்கம். 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று முதலிலேயே நோன்பின் காரணத்தைத் தெரிவிக்கிறாள்

*ஆண்டாள். அதைச் செய்தால் 'சார்ங்கம் உதைத்த சர மழை போல்' நல்ல மழை பொழியும்; நாடு சிறக்கும்; நல்ல கணவன் அமைவான் இதுவே நோன்பின் பலன். ஆனால் நோன்பு முடிந்து, ஆடை ஆபரணங்கள் பூண்டு 'மூட நெய் பெய்து முழங்கை வழி வார' நல்ல உணவை உண்ட பின்னரே அவர்களுக்கு உண்மையான பக்தியின் அரிதி நிலை தெரிகிறது. இறைவனுக்குக் குற்றேவல் செய்து, தொண்டு புரிவதே பாவை நோன்பின் பயன் என்று உணர்கிறார்கள். கடைசிப் பாசுரங்களில் இந்தத் தொண்டு என்னும் பேரின்ப நிலை விளக்கப் படுகிறது. இல்லறத்தில் இருந்துகொண்டு அன்றாடப் பயன்களையே கருத்தில் கொண்டு வாழ்க்கை பயணத்தை நடத்தும் நமக்கு இது ஒரு வழிகாட்டியாக அமைகிறது. சிற்றின்பங்களின் சுவை மங்கி மறையும் தருணத்தில் பேரின்பத்தின் ஆரம்பங்கள் தெரிய ஆரம்பிக்கின்றன. இது நம் அனைவரின் அநுபவம். இதையே கோதை நாச்சியார் சுவையான மதுர பாவத்தின் மூலம் தெரிவிக்கிறாள்.*

*முதல் 25 பாடல்களில் லோகாயதமான பலன்களையே யாசித்த மங்கை நல்லாள், கடைசி ஐந்து பாசுரங்களில் சாஸ்வதமான பலனைக் கோருகிறாள். இதனால் கீழ்க்கண்ட இந்தத் தனியனில் 'ஐயைந்து' (ஐந்து ஐந்துகள் = 25) 'ஐந்து' என்று தனித்தனியாகக் கூறப் பட்டுள்ளது.*

*கோதைதமிழ் ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை*
*வையம் சுமப்பது வம்பு*

*26வது பாசுரம் முதல் கண்ணனிடம் நேரில் உரையாடும் பகுதி துவங்குகிறது. இதுவே ஆய்ச்சியரின் மன மாற்றத்திற்குக் காரணமாகிறது. ஞானம் பிறக்க இறைவனிடம் உரையாடி மன்றாட வேண்டும் என்பது சூக்ஷ்மமான பொருள்.*

வைஷ்ணவத்தில் மட்டுமன்றி, இந்த உணர்வு எல்லா சித்தாந்தங்களிலும் பார்க்க முடிகிறது. திருமண கட்டத்தில் தன்னை வாதுக்கு அழைத்து 'நீர் என் அடிமை' என்று வம்பு செய்த இறைவனை, 'பித்தா, பிறைசூடிப் பெம்மானே' என்று சுந்தர மூர்த்தி நாயனார் தன் முதல் பாசுரத்திலேயே அழைத்து நட்புப் பாராட்டுகிறார்.

சைவ சமயக் குரவர்களில் வேதாந்தத்தின் பால் பெரிதும் ஈடுபாடு கொண்டவர் மாணிக்கவாசகர். இவர் இயற்றிய திருவாசகம், சைவ சித்தாந்தத்தை விளக்க வந்த நூல்களில் தலையானது. ஆனால் இவருடைய திருவெம்பாவை என்னும் பாடல் திரட்டில் மதுர பாவமே தலை தூக்கி நிற்கிறது. இதன் துவக்கத்திலேயே இளம் பெண்கள் சிலர் இறைவன் புகழைக் கேட்டும் செவி சாய்க்காமல் உறங்கிக் கிடக்கும் மற்றொரு பெண்ணை சீண்டும் பாங்கினைக் காண்கிறோம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்

'இறைவன் பாடலைக் கேட்டும் உறக்கத்தைக் கைவிடாத உன் காதுகள் செயலற்றுப் போனதோ?' என்னும் வரிகளில் சிறு பெண்ணின் ஏளனத்தைப் பார்க்க இயலுகிறது. இதே போல வேறொரு பெண்ணையும் சீண்டுகின்றனர். இவள் நித்திரையில் பிரியமுள்ளவள். 'ஏன் இதற்குள் வந்துவீட்டிர்கள்? எல்லோரும் வந்து சேர்ந்தார்களா?' என்று கேட்கிறாள். தோழிமார்கள், 'தூங்கி வீணே காலத்தைக் கழிக்காதே. வேதங்கள் உணரும் மெய்யானை, விண்ணுலகமும் போற்றும் அச்சிவ பெருமானைப் பாடும் நாங்கள் தவறான ஒன்றைச் சொல்ல மாட்டோம். வேண்டுமென்றால் நீயே வந்து எண்ணிப் பார்; குறைவாக எண்ணிக்கை இருந்தால் போய்த் தூங்கு'

என்கிறார்கள். இளம் பெண்களின் இயற்கையான உரையாடல் பாணி!!

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள் நெக்கு நின்றுருக யாம் மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மற்றொரு காட்சி. இவர்களையெல்லாம் தானே வந்து எழுப்புவதாக ஜம்பம் பேசிய வேறொரு பெண் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறாள். 'எங்கே போயிற்று உன் பேச்சு? வெட்கமாக இல்லையா; இன்னுமா விடியவில்லை உனக்கு?' என்று அவளை அழைக்கிறார்கள் தோழியர்.

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ.... 6

எத்தனை கிண்டல். ஆனால் இந்த இளம் பெண்களின் பேச்சிலேயே சைவ தத்துவத்தையும் அடியார் விளக்கத் தவறுவதில்லை.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே

என்னும் இந்த எளிய வரிகளில் பரம்பொருளின் காலங்களைக் கடந்த பெருமையைத் தெளிவாக்குகிறார் மணிவாசகர். ஆனால் அவனை அறிதல் என்பது ஆத்ம விசாரத்தாலேயே கிடைக்கும் என்பதை பத்தாம் பாசுரத்தில் காண முடிகிறது.

ஏதவன் ஊர் ஏதவன் பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

*மணிவாசகரின் இந்தப் பேரெழில் பொங்கும் பாசுரங்கள் திருவண்ணாமலையிலேயே பாடப் பட்டன என்பது கூடுதல் விசேஷம். இந்த விசாரமே ரமணர் வலியுறுத்திய மெய்க் கருத்து. மற்ற பாடல்களில் வேதாந்த விசாரத்தைப் பன்முறை வலியுறுத்திய பகவான், அக்ஷர மணி மாலையில் மதுர பாவத்தையே முன்னிறுத்துகிறார். ஆண்டாள் திருப்பாவையில் கண்ணனைத் துயில் எழுப்பியது போலவே, ரமணரும் அருணாசல ஈசனைத் துயில் எழ வேண்டுகிறார்.*

*ஏனிந்த உறக்கம் எனைப் பிறர் இழுக்க*
*இது உனக்கு அழகோ அருணாசலா ! பாடல் 10*

*இறைவனின் உறக்கம் நம் போன்றோரின் துயில் அல்ல. அதை ஞான நித்திரை எனக் கூறுவார்கள். உறக்கம்விழிப்பு போன்ற அவஸ்தைகளைக் கடந்தவன் அவன். ஆனால் அவனுக்குத் திருப்பள்ளியெழுச்சி செய்வது தொன்றுதொட்டு வரும் பக்தி வழிபாடு. உருவமற்ற இறைவனுக்கு நாமத்தையும் குணத்தையும் உருவத்தையும் அளித்து, அவனை நமக்கு அருகாமையில் கொண்டு வர முயற்சி செய்கிறோம். அவனிடமிருந்தே இரவும் பகலும் சூரியசந்திரநட்சத்திரங்களும் தோன்றின. (தஸ்ய பாசா சர்வமிதம் விபாதி“அவனுடைய ஒளியையே இவை அனைத்தும் பிரதிபலிக்கின்றன என்று அவன் பெருமையை வேதம் பறை சாற்றுகிறது.) இருப்பினும் அவனுக்கு மனித உருவளித்து நாம் அவனை இரவில் உறங்க வைத்து வைகறைப் பொழுதில் பள்ளியெழுச்சி கண்டு மகிழ்கிறோம்.*

*இங்கு ரமணர் ‘பிறர் இழுக்க’ என்னும் கருத்தை முன் வைக்கிறார். யார் அந்தப் பிறர்? இதற்குத் தத்துவ விளக்கம் நீள்கிறது. நம்மை மூன்று விதத் துயர்கள் சூழ்ந்துள்ளன. அவை தெய்வத்தால் நேரிடும் ‘ஆதிதெய்வீகம்’; இதை விதி, ஊழ் என்று பலவிதங்களில் அழைக்கிறோம். அடுத்து, உலகின்*

பௌதிக சக்திகளால் நிகழும் 'ஆதிபௌதீகம்'; மூன்றாவது நம்மாலே நமக்கு உண்டாகும் 'ஆத்யாத்மிகம்'. இந்த மூன்றையும் 'தாபத்ரயம்' என்று அழைப்பார்கள். இவற்றுள் நம்மால் ஏற்படும் துயர்களே நம்மை அதிகம் இறைவனை அண்டாமல் இழுக்கின்றன. இதற்கு நம்முடைய சத்வரஜஸ்தமஸ் என்னும் குணங்களே காரணம். இவற்றுடன் நம்முடைய கர்ம வினைகளும் நம் செயல்களுக்குக் காரணமாகிறது. இவை சஞ்சிதப்ராரப்தஆகாமி கர்மங்கள் என மூன்று வகைப் படுகின்றன. இவ்வாறு பல்வேறு சக்திகள் நம்மைப் பரம்பொருளிடமிருந்து திசை திருப்புகின்றன. இவற்றிலிருந்து விடுபட இறைவன் அருளே துணை. இதற்காகத் துயிலெழுவாய் என்பது பகவானின் வாக்கு. இதற்கு மதுர பாவமே சிறந்த வழித்துணை. சுலபமானதும் கூட. இதை 'நான் யார்?' என்னும் ஆழமான சற்றே திகைக்க வைக்கும் தத்துவத்தின் ஆரம்பப் படிக்கட்டாக அமைத்துத் தருகிறார் பகவான். 'என்னைப் பல்வேறு சக்திகள் இழுக்கின்றன; நான் அவற்றை மீறி உன்னை அடைய இயலாதவனாக இருக்கிறேன்; என்னை நல்வழிப் படுத்து' என நாம் இறைஞ்ச ஆரம்பிக்கும் தருணத்தில் அவன் நம் துணைக்கு வருகிறான். இந்திரியங்கள் இழுக்கும் வழியிலேயே நாம் போகிறோம் என்பதே நம் பலவீனம். இதையே உபனிஷதங்களும், கீதையும் சனத்சுஜாதீயம் போன்ற கிரந்தங்களும் வலியுறுத்துகின்றன. இவற்றையே நம்மை இழுக்கும் சக்திகளாக ரமணர் பார்க்கிறார்.

இறைவன் பவித்ரமானவன்; குணங்களின் உறைவிடம். பரமானந்த சொரூபம். அவனை அடைய நாம் சிறு முயற்சி செய்தால் போதும், நம்முடன் உறைய அவன் சித்தமாக இருக்கிறான். அந்த உறவு நமக்கு மட்டுமல்ல அவனுக்கும் மகிழ்ச்சி தரக்கூடியது. இதை பகவானின் வாக்கில் பார்ப்போம்.

*தோடம் இல் நீ அகத்தோடு ஒன்றி என்றும்*
*சந்தோடம் ஒன்றிட அருள் அருணாசலா (பாடல் 52)*

இதில் மற்றொரு கருத்தும் தொனிக்கிறது. இறைவன் தோஷமற்றவன் என்பது தெளிவு. அத்தகையவன் உறையும் இடமும் பரிசுத்தமாக நிர்மலமாக இருக்கவேண்டும் அல்லவா. ஆனால் நம் மனம் ஆசாபாசங்கள் அலை மோதும் ஒரு குப்பைக் கூடையாக இருக்கிறது. அங்குப் பவித்திரமான பரமனை ஏற்றி வைக்க இயலாது. ஆகையால் நீயே என் அகத்தை சுத்தம் செய்து அங்குக் குடியேறு. அதாவது வீட்டுக்கு வரும் விருந்தாளியையே வீட்டை சுத்தம் செய்யச் சொல்லும் பாங்கு தெரிகிறது. இது முதல் நிலை. நான் தோஷமுடையவன் என்னும் மனோநிலை.

இந்தப் பாடலையே சற்று வரிசை மாற்றிப் பார்த்தால் 'தோடம் இல் அகத்தோடு நீ ஒன்றி' என்று கொள்ளலாம். இதில் 'நான் பரிசுத்தமானவன்; நீ என்னுடன் உடன் இருக்க வா' என்று வேண்டுகிறோம். இது இரண்டாம் நிலை. இங்கு உயர்ந்த ஒரு ஜீவாத்மா பரமாத்மாவை அழைக்கும் நிலை. இது எல்லோருக்கும் சாத்தியம் இல்லை. ஆனால் பகவானின் வாக்குதான் எத்தனை அழகும் ஆழமும் கொண்டது. சிறு மாற்றத்தால் வரிகளின் அமைப்பை மாற்றினால் மாறுபட்ட இரு நிலைகளைக் காண முடிகிறது!!

இந்த இரண்டாம் நிலையை அடைந்த சாதகனின் நிலையை சங்கர பகவத்பாதர் 'நிர்வாண தசகம்' என்னும் தத்துவ விளக்க போதனையில் விவரிக்கிறார். பத்தே ஸ்லோகங்கள் கொண்ட இந்த நூல் 'தசஸ்லோகி' எனவும் வழங்கப் படுகிறது. ஆதிசங்கரர், தன் குருவான கோவிந்தபாதரை முதலில் பார்த்தபோது அவர் 'நீ யார்?' என்று கேட்க, அதற்கு விடையாக பத்துப் பாசுரங்களால் ஆத்மாவின் தன்மையை விளக்கினாராம். இதில் முதல் ஒன்பது

*பாசுரங்கள் 'ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம்' என்று முடிகின்றன. சற்றுக் கடினமான நூல். ஆரம்ப நிலை சாதகனுக்கு பிரமிப்பை ஏற்படுத்தக் கூடிய அதே சமயம் ஆன்மாவின் உண்மை நிலையைத் தெள்ளத்தெளிவாக விளக்கும் நூல். இதில் ஆத்மா என்பது 'அவன் இத்தகையவன் இல்லை' என்னும் நேதி நியாயப் படி விளக்கப் படுகிறது. 'நான் என்பது சரீரமனஇந்திரிய பந்தங்களுக்கு அப்பாற்பட்டது' என்னும் விளக்கமே இதன் அடிப்படை. அதனால் இது நிர்வாண தசகம் என்ற பெயர் பெற்றது. இந்த சுஷுப்தி நிலையில் தாய், தந்தை, வேதம், வேள்வி, பிரபஞ்சம், புண்ய க்ஷேத்ரம் என்று எதுவுமே இல்லை. அவன் இந்தப் பந்தங்களுக்கும் உறவிற்கும் அப்பாற்பட்டவன். நிராகாரநிர்க்குண பிரம்மம். பற்றுகள் அற்றுப் போனதால் சுகதுக்கங்களும் இல்லை. விருப்பும் இல்லை; வெறுப்பும் இல்லை. எல்லைகள் அற்றுப் போகின்றன. அதுவே பிரம்மானந்தம். காரண காரியங்களுக்கு என்னும் எல்லைகளைத் தாண்டிய நிலைப்பாடு. நித்தியானந்தம் என்று ஞான மார்க்கம் விளக்கும் உயர் நிலை.*

*ந மாதா பிதா வா ந தேவா ந லோகா ந வேதா ந யஜ்ஞா*
*ந தீர்தம் ப்ருவந்தி*
*ஸுஷுப்தௌ நிரஸ்தாதி சூந்யாத்மகத்வாத்*
*ததேகோவசிஷ்ட: சிவ: கேவலோஹம் 3*

*இதற்கு அடுத்த பாசுரத்தில் இந்நிலையின் மற்றொரு பரிமாணம் விளக்கப் படுகிறது. இங்கு சாங்கியம், சைவம், பாஞ்சராத்ரம், ஜைனம், மீமாம்சம் போன்ற சித்தாந்தங்களுக்கு இடமில்லை. மகா வாக்கியங்கள் போற்றும் சுத்தபிரம்மம் குணங்களற்றது. மாறுபாடுகளாகிய விகாரங்கள் இல்லாதது. அது ஒரு அத்புத நிலை. மதங்கள், சித்தந்தங்கள் போன்றவை மனிதனுக்கு சிறந்த வழிகாட்டிகள்; ஆனால் அவை அவனுடைய சிந்தனைக்கு எல்லைக் கோடுகளை*

வகுக்கின்றன. இதையெல்லாம் தாண்டியவனே அந்த அற்புத 'நான்' என்னும் நிலை. ரமணர் இதைக் கருத்தில் கொண்டே எந்த வித புதிய சித்தாந்த்தையும் நம் முன் வைக்காமல், 'நான் யார்?' என்னும் கேள்வியையே ஒரு வேள்வியாகக் கொண்டார். இதுவே சங்கரர் வகுத்த வழி. கீழ்க் காணும் ஸ்லோகத்தில் இதன் முழு வடிவத்தைக் காணலாம்.

*ந ஸாங்க்யம் ந சைவம் ந தத் பாஞ்சராத்ரம் ந ஜைநம் ந*
*மீமாம்ஸகாதேர்மதம் வா*
*விசிஷ்டாநுபூத்யா விசுத்தாத்மகத்வாத்*
*ததேகோ(அ)வசிஷ்ட: சிவ: கேவலோ(அ)ஹம் 4*

இந்நிலையை அடைவது மிக மிகக் கடினம். 'நான் என்று எழும் இடம் எது? அதை உணர முயற்சி செய். அதனால் நீ எதை நான் என்று உணருகிறாயோ அந்த நான் தலை சாயும்' என்பதே சங்கரர் கருத்து. இதுவே ரமணர் வகுத்த பாதை.

சங்கரரின் நிர்வாண தசகமே, பகவானின் தத்துவம். அதைச் சற்று எளிமைப்படுத்தி மணிமாலையாக சமர்ப்பித்தார். 'சிற்றம்பலமும் சிவனும் அருகிருக்க வெற்றம்பலந் தேடி விட்டோமே' என்ற சித்தர் பாடலும் இந்த நிலையை அடையாத மானிடரைக் குறித்தே எழுதப் பட்டது. உணர்வுகளால் அலைக்கழிக்கப்படும் மனதையும் தன் போக்கில் செல்லும் இந்திரியங்களையும் அடக்கி 'சும்மா இருத்தலே சுகம்' என்ற பாடல் அனைவருக்கும் நினைவுக்கு வரும்.

இன்று வருமோ நாளைக்கே வருமோ அல்லது மற்
றென்று வருமோ அறியேன் எங்கோவே துன்றுமல
வெம்மாயை அற்று வெளிக்குள் வெளி கடந்து
சும்மா இருக்கும் சுகம்

ஆனால் அலை பாயும் இந்த மனதை அடக்கி மாயையைக் கடந்து பிரம்மத்தை நோக்கிப் பயணிக்கும்

உயரிய சீவனோ இரண்டு குண நலன்களோடு ஒளிர்கிறான். அவன் சுகமாக இருக்கிறான்; அவன் சும்மா இருக்கிறான். இந்த சுகம், துக்கத்தின் எதிரான நிலை அல்ல. அது தாற்காலிகமானது. இங்குக் குறிப்பிடப்படும் சுகம் நிரந்தரமானது. பயமற்ற, சலனமற்ற சுகம். எதிர்பார்ப்புகள் இல்லாதது.

'சும்மா' இருத்தல் என்பது எந்தச் செயலையும் ஆற்றாமல் இருக்கும் நிலை அல்ல. இதைக் கீதையின் நான்காம் அத்தியாயத்தில் கண்ணன் மிக எளிமையாக, அதே சமயம் ஆணித்தரமாக விளக்குகிறான். 'அறிவாளி, செயலில் செயலில்லாமலும், செயலற்றது போல் காட்சியளித்து செயல் புரிபவனாகவும் இருக்கிறான்.' இந்தக் கருத்தில் நோக்கினால் சங்கரரும், விவேகானந்தரும் ரமணரும் வாழ்ந்த வாழ்வின் உட்பொருள் விளங்கும். சம்சாரிக்கு, செயல் என்பது பலனைக் கருத்தில் கொண்டு ஆற்றப்படும் செய்கைகள். இதற்கு அவன் படும் பாடு இருக்கிறதே, அப்பப்பா சொல்லி மாளாது. இதோ ஒரு பாடல்

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி
நலனொன்று மறியாத நாரியரைக் கூடிப்
........ ...
ஆப்பதனை யசைத்து விட்ட குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல வகப்பட்டீரே.

போதுமா! நாம் திறமை என்று நினைத்துச் செய்யும் செயல்கள், சொல்லும் பொய்கள், இறுதியில் எங்கு கொண்டு செல்கின்றன? கிடைத்தற்கரிய மனிதப் பிறவியைப் பெற்ற நாம் எங்கே போகிறோம்? இந்தக் கேள்விகளுக்கு சுலமான விடையாக சைவ வைணவ இலக்கியங்களில் தத்துவத்தைப் பேசிய சான்றோர்கள், மதுர பாவத்தையும் சேர்த்தே அநுபவித்தனர் என்பது சுவையான செய்தி.

# கண்ணைக் கட்டிக் காட்டில் விடுதல்

பேரறிவை எங்ஙனம் பெறுவது என்பதை உத்தாலகர், தனது மகனாகிய ஸ்வேத கேதுவுக்கு உபதேசித்தது:

திருடர்கள் செல்வந்தன் ஒருவனைச் சிறைப்பிடித்து, அவனது செல்வத்தைக் கொள்ளை கொண்டபின், அவன் கண்களைக் கட்டி, வழி தெரியாத காட்டில் விட்டு விடுவார்கள். அதுபோல, நமது ப்ராரப்த வினைகள், ஆசை மோஹம் போன்ற மறைப்புக்களால் நம் கண்களைக் கட்டி நமது ஞானத்தை மறைத்து பிரபஞ்சம் என்னும் காட்டில் நம்மைக் கொண்டு விட்டு விட்டுள்ளன. நாம் இப்போது இருக்கும் இடம் எது நம்முடைய ஆதாரமான ஊருக்குத் திரும்பிச் செல்லும் வழி எது என்று அறியாமல் அச்சத்திலும் அறியாமை மயக்கத்திலும் கிடக்கிறோம். தகுந்த ஆசானாகிய வழிகாட்டி வந்து, நமது கண் கட்டுகளை அவிழ்த்தால் கண் திறந்து வழி நாடி ஊர் போய்ச் சேருவோம். ஆசை, மோஹம் போன்ற கட்டுக்கள் அவிழ்ந்தால் கண்கள் திறந்து ஞான ஒளி கிடைக்கும். நம்முடைய உண்மை ஸ்வரூபமும் நமக்குத் தெரிய வரும். இல்லையெனில் எந்த முயற்சியும் பயன்தராது.

சரியான தெளிந்த காட்சி பெற கண்கள் என்ற கருவியும், புத்தியும் மட்டும் போதாது. ஆசை மற்றும் மோஹத் திரைகள் கண்களை மூடாமல் இருக்க வேண்டும். அவை இருப்பின், அவற்றை நீக்க வேண்டும்.

அவை மனத்திலிருந்து நீங்கிய பின்னர், மனம் பரமாத்மாவின் அருளினால் ஸ்வயம் ப்ரகாசம் அடைந்து, சாட்சாத்காரம் பெறுகின்றது.

# ஸ்ரீ திண்ணை சுவாமிகள்

## ஆங்கில மூலம் : மைக்கேல் ஜேம்ஸ்
## தமிழாக்கம் : பேராசிரியர் வி. நிரஞ்சன்

*6 டிசம்பர் 2003. கார்த்திகை தீப தரிசன நாள். அதிகாலை நேரம். பகவான் ரமணரின் அதிசிறந்த அடியவருள் ஒருவர் தன் ஊன் உடலை அருணையில் நீத்தார். வெளி உலகத்தின் பார்வையில் படாது ஒதுங்கி வாழ்ந்தார். பகவான் ஸ்ரீ ரமணரின் அருளால் ஆத்ம ஞானம் அடைந்தவர். ஆத்ம ஞானம் போதத்திலேயே 54 ஆண்டுகள் திருவண்ணாமலையில் வாழ்ந்து வந்தார்.*

*அவரைப் பற்றி யாருக்கும் அதிகம் தெரியாது. அவர் காலத்தைச் சேர்ந்த அடியவர்கள் கூட அவரை நன்கு அறிந்திலர். இதற்குக் காரணம் பகவானின் திருவுள்ளம் என்றே கொள்ளவேண்டும். குறைவுபட்ட நம் அறிவாற்றலால் அத்திருவருளின் தன்மையை ஊகிக்க இயலாது. தன்னை அழித்து வாழ்ந்தவர் இவ்வடியார்; சுயவிருப்பம் முற்றிலும் அற்றவர். மற்றவரின் பார்வையில் குறைந்த அளவே படுமாறு வாழும் சூழ்நிலையை அவர் தெரிந்தெடுத்துக் கொண்டதுபோல் தோன்றுகின்றது. அவரை நன்கு தெரிந்திருந்த சிலரும் அவருடைய இத்தேர்வினை மதித்து அவரை உலகிற்குத் தெரியப்படுத்தினாரில்லை.*

*இப்பொழுது அவர் தம் நரவுடலைக் களைந்து விட்டார். ஆதலால் அவரைப் பற்றித் தெரிந்து வைத்துள்ள குறைந்த சில செய்திகளை மற்ற அடியவர்களுடன் பகிர்ந்து கொள்வது தவறில்லை.*



பூர்வாசிரமத்தில் இவ்வடியவர் பெயர் ராமஸ்வாமி என்பது. ஆனால் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக திண்ணை சுவாமிகள் (பெஞ்ச் சுவாமிகள்) என்றே மற்றவருக்கு அறிமுகமானவர். இதற்குக் காரணம் அவர் ஒரு வீட்டின் திண்ணையிலேயே, அத்திண்ணையை விட்டு அகலாமல், பல ஆண்டுகாலம் இருந்து வந்ததே. இவ்வளவு ஆண்டு காலத்திலும் எப்பொழுதாவது ஓரிரு முறை திண்ணையைவிட்டு வெளியே சென்று

*திரும்பி இருக்கலாம். அவ்வீடு மறைந்த திரு. C.P. நாதன் அவர்களின் குடும்பத்தினருக்குச் சொந்தமானது. இடமும், உணவும் கொடுத்து அவருடைய உடல் பராமரிப்பிற்கான மிகக் குறைந்த தேவைகளையும் நிறைவேற்றித் தந்து வந்தனர் C.P. நாதனும் அவருடைய குடும்பத்தினரும்.*

*12 டிசம்பர் 1912 அன்று கோயம்பத்தூரில் வழக்குரைஞர்களும், மருத்துவர்களும் நிரம்பப் பெற்ற தெலுங்கு பிராமண குடும்பத்தில் திண்ணை சுவாமிகள் பிறந்தார். இளம் வயதில் பல ஆண்டுகள் சென்னை மருத்துவக் கல்லூரியில் (Madras Medical College) உயிரியல் வேதியராகப் (Bio-Chemist) பணியாற்றி வந்துள்ளார். அக்கால கட்டத்தில் அவருக்குத் திருமணம் ஆகி தம் மனைவியுடனும், நான்கு குழந்தைகளுடனும் வாழ்ந்து வந்தார். முப்பத்தைந்து வயதை ஒட்டிய காலம் வரை அவர் வாழ்வில் நிகழவிருந்த அகம், புறம் தழுவிய பெருமாற்றங்கள் குறித்த அறிகுறி ஏதும் அவருடைய புறவாழ்க்கையில் காணப்படவில்லை.*

*முதல் முறையாக பகவானின் தரிசனம் வேண்டி திருவண்ணாமலைக்கு அவர் வந்தது 1947ல் இருக்கலாம். குறுகிய கால அளவே நிகழ்ந்த இம்முதல் சந்திப்பு அவருடைய புற வாழ்க்கையில் உடனுக்குடனே எவ்வித மாற்றத்தையும் உண்டாக்கவில்லை. 1947ம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் அவருடைய புறவாழ்வு மாறத் தொடங்கியதற்கான அறிகுறி தென்பட்டது. அப்பொழுது மேற்படிப்பிற்காகவும், ஆய்விற்காகவும் அமெரிக்காவிற்குச் செல்ல அவருடைய துறையிலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட இருந்தார். முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவரே. ஆனால் விரைவிலேயே அத்தேர்வு திருத்தப்பட்டு, அவருக்குப் பதிலாக பணியில் இளையவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியல் செல்வாக்கின்*

*காரணமாக இவ்வநியாயமான மாற்றம் நடந்திருக்கிறது என்று அறிந்த அவர் கொள்கை அடிப்படையில் தன் பதவியைத் துறந்தார். வேறு ஒரு வேலை தேடுவதற்கு முன்பாக, பகவானின் சன்னிதியில் மேலும் சில காலம் இருக்க விரும்புவதாக அவர் தன் மனைவியிடம் கூறினார். இவ்வாறு திருவண்ணாமலைக்கு இரண்டாவது முறை அவர் வந்தார். உடனேயே தன் மனைவிக்கு எழுதிய கடிதத்தில் அங்கே அதிககாலம் தங்க உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அது முடிந்தவுடன் மனைவியையும், குழந்தைகளையும் அங்கே கூட்டி வந்துவிட வேண்டும். அதற்குள் அவர்கள் தங்க ஏற்ற இடம் கிடைத்துவிடும் என்று மேலும் தெரிவித்திருந்தார். அதன்படியே அவர் குடும்பத்தினரும் அவரோடு இணைந்து, அவ்வாண்டு ஜூலை மாதம் வரை இருந்து வந்தனர். அக்கால கட்டத்தில் நான்காவது குழந்தையின் பிறப்பிற்காக அவரது மாமனாரின் வீட்டிற்கு அனுப்பினார். அவரது மனைவி செல்வதற்கு முன் அவரிடம் பாண்டிச்சேரியில் தகுதியான வேலை ஒன்று இருப்பதாகவும், உடனே அங்குச் செல்லப்போவதாகவும் கூறினார்.*

*திருவண்ணாமலையில் குடும்பத்தினருடன் இருந்த அச்சில மாதங்களில் பெரும்பாலான நேரம் அவர் பகவான் சன்னிதியில் இருப்பார், அல்லது கிரிவலம் வந்து கொண்டிருப்பார். அச்சமயம் முருகனாரிடம் அவருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டதாகத் தெரிகின்றது. அவருள்ளே நிகழ்ந்து வரும் அகமாற்றத்தைக் காட்டும் வகையில் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் மதிய உணவிற்கு வழக்கத்திற்கு மாறாக மிகவும் தாமதமாக வந்தார். அப்பொழுது அவரது தாயார் அவரிடம், பகவானைப் பார்க்கச் சென்றிருந்தாயா? என்று வினவ, அவர் சும்மா*

சுவாமியைப் பார்ப்பதில் என்ன பயன்? நாமும் சுவாமி ஆக வேண்டும், என விடை பகிர்ந்தார்.

அவருடைய குடும்பத்தினர் சென்ற பிறகு, ஒரு நாள் அவர் பகவானிடம் வேலைக்கு விண்ணப்பத்திற்காக பாண்டிச்சேரி செல்வதற்கு அனுமதி கேட்டார். அதற்கு பகவான், இரு என்று குறிக்குமாயினும், இந்தச் சூழ்நிலையில் தங்கி இரு, பொறுத்திரு என்று பொருள் தருவதாக அமையும். யாராவது பகவானிடம் விடைபெற்றுச் செல்ல வந்தால். அவர்களை தங்கி இருக்குமாறு பகவான் சொல்வது வழக்கமில்லை என்றாலும், அந்நேரம் அங்கிருந்த அடியவர்களில் பலர் இதனைக் கவனிக்கவில்லை. ஆயினும், அவ்வடியவருள் ஒருவராயிருந்த முருகனார் பகவான் மொழிந்த அவ்வொரு சொல்லின் ஆற்றலை உணர்ந்தார்; அது திண்ணை சுவாமிகளை எவ்வளவு ஆழமாகப் பாதித்தது என்பதனையும் உணர்ந்தார்.

பகவான் சொன்ன 'இரு' என்னும் சொல்லுக்கும், அதன் இரு பொருளுக்கும் திண்ணை சுவாமி கீழ்ப்படிந்தார். அத்தருணத்திலிருந்து திருவண்ணாமலை விட்டு ஒரு போதும் அவர் நீங்கவில்லை. அடுத்து, அழிவில்லாத பேரின்பமாகிய சொரூப நிஷ்டையில் வலுவாக ஊன்றிவிட்டார். 'சும்மா இரு' என்னும் இரு வார்த்தைகளால் முருகப் பெருமான் அருணகிரிநாதருக்கு ஞானம் அருளினார், பகவானோ 'இரு' என்னும் ஒரு சொல் சொல்லி திண்ணை சுவாமிகளுக்கு ஞானம் அருளினார் என்று சாது ஓம் கூறுவார்.

திண்ணை சுவாமிகளின் அகவாழ்வில் ஏற்பட்ட அவரது புறவாழ்வில் முழுமையானதும், பெரிதுமான ஒரு மாற்றத்தைத் தோற்றுவித்தது. அந்த நாளிலிருந்து அவரது புறமுகச் செயல்பாடுகளில் அடிப்படை மாற்றம் நிகழ்ந்தது. அவர் இயல்பாகப் பேசுவது நின்றது. எப்பொழுதாவது தான் அவர் பேசினார்.

அப்படிப் பேசினாலும் அவரது வார்த்தைகள் புதிராகவே இருந்தன; பல சமயம் ஆன்மிகம் தழுவிய மாற்றுப் பொருளற்றவையாகவும் தோன்றின. அவர் தம் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாதவரானார்; அவருடைய தலைமுடி நீண்டு வளர்ந்து சடைபிடித்துப் போனது. பிச்சையெடுத்து உண்டார்; வழக்கமாக ஒரு வேளை உணவுதான்; சில சமயம் அவர் அகமுகமாகி நிஷ்டையில் பல நாட்கள் ஒடுங்கிவிடுவது உண்டு என்று அறிந்தவர் சொல்வர். அப்பொழுது உண்பதற்கோ, தேகசுத்திக்கோ அவர் அசைந்தது கிடையாது.

சிறிது காலமாக அவரிடம் செய்தி ஏதும் வராத காரணத்தால் அவருடைய குடும்பத்தினர் கவலையடைந்தனர். ஆதலால் அவருடைய மைத்துனர் அவருக்கு என்ன நிகழ்ந்து விட்டது என்ற அறிய திருவண்ணாமலை வந்தார். கடைசியாக அவரைக் கண்டுபிடித்த பொழுது அவர் முற்றிலும் மாறியிருந்ததை அறிந்து கொண்டார். வீட்டிற்குத் திரும்பி வரும்படி வேண்டிக் கொண்ட பொழுது. அவர் எவ்விதமான பதிலையும் தராது இருந்ததையும் கண்டார். இதன் காரணமாக அவர் மனநலம் கெட்டுவிட்டது என்று முடிவு செய்தார். ஆனால் அவருடைய மனைவி இதை நம்பவில்லை. அவரைப் பார்க்கத் தன்னை அழைத்துச் செல்லும்படி தன் தந்தையிடம் வேண்டினார். கடைசியாக பகவானின் மகா நிர்வாணத்திற்குப் பிறகு அவர்கள் திருவண்ணாமலை வந்து சேர்ந்தனர். அவரை வீடு திரும்ப பலமுறை வேண்டியும், அந்த முயற்சி பலனளிக்கவில்லை. இதைக் கண்ணுற்று அவருடைய மனைவியார் தன் தந்தையிடம் பின்வருமாறு கூறினார்: அவர் இப்படியே வாழ விரும்பினால் அவரது விருப்பத்திற்குக் குறுக்கே நான் நிற்க விரும்பவில்லை. ஆனால் அவரது மனைவி என்கின்ற முறையில் அவருக்குப் பணிவிடை செய்ய எனக்குக் கடமையும், உரிமையும் உண்டு. ஆகவே அவரைப் பார்த்துக்

*கொள்ள இங்கேயே தங்கியிருக்க எனக்கு அனுமதி தாருங்கள். தந்தையார் அதற்கு இணங்கி ஆஸ்ரமத்து குருக்களாகிய கிட்டு அய்யர் வளாகத்தில் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்தி மனைவி, மகள், இளைய மகன்கள் இருவரும் தங்க ஏற்பாடு செய்தார்.*

*தன் மனைவியும் மாமனாரும் கேட்டுக் கொண்டதன் பேரில் திண்ணை சுவாமிகள் தன் மனைவியின் பணிவிடையை ஏற்றுக்கொள்ள இசைந்தார். அவர்களுக்கு அருகாமையிலேயே ஒரு குடிசையில் சில காலம் வாழ்ந்து வந்தார். அக் காலகட்டத்தில் பெரும்பான்மையான நேரம் ஆத்ம நிஷ்டையில் ஆழ்ந்துவிடுவார் ; உணவிற்கோ கிரிவலம் வருவதற்கோ மட்டுமே நிஷ்டையிலிருந்து வெளிவருவார். சிறிது காலம் சென்ற பின்னர் அவரது மாமனார் அவருடைய மனைவியை அவருடைய மூத்த மகன்களுடன் சேர்ந்து இருப்பதற்காக அழைத்தார். அவர் மனைவி அதனை முதலில் மறுத்தாலும், அவருடைய கடமை என்ற திண்ணை சுவாமிகள் கூறியதனால் தந்தையிடமே திரும்பினார். பின்னர் திண்ணை சுவாமிகள் விரூபாக்ஷ குகைக்குத் திரும்பிச் சென்று அங்கே தங்கி வரலானார். வழக்கம்போல் பெரும்பாலான நேரம் ஆத்ம நிஷ்டையிலே இருந்து வரலானார். பல நாட்களாக, கிரிவலம் வருவதற்கும், வழியிலே உணவைப் பிக்ஷையாகப் பெறுவதற்கும் மட்டுமே நிஷ்டை கலைந்து எழுவது வழக்கம் ஆயிற்று.*

*முதலில் நகரில் உள்ள வீடுகளில் எங்காவது பிக்ஷை எடுத்து வந்த நாளடைவில் ஸ்ரீ ரமண நகரில் உள்ள ஒரு சில வீடுகளில் மட்டுமே பிக்ஷை எடுப்பதெனக் குறுக்கிக் கொண்டார். காலப்போக்கில் தான் உண்ணும் ஒரே வேளை உணவிற்காக திரு. C.P. நாதன் வீட்டிற்கு மட்டுமே பல நாட்கள் வந்தார். 1950ன் இறுதிகட்டத்தின் ஒருநாள் அவர்கள் வீட்டிற்கு வந்தபொழுது திருமதி.*

*C.P. நாதன் அவர்களிடம், அம்மா வெளியிலே மழை பெய்கிறது. நான் இங்கே ஒதுங்கிக் கொள்ளலாமா? என்று கேட்டார். சுவாமி, இது உங்கள் வீடு. நீங்கள் தாராளமாக இங்கே தங்கலாம், என்று அவர்கள் கூறினார்கள். அன்று அவர்கள் வீட்டின் திண்ணையில் உட்கார்ந்தவர் அங்கேயே இருந்து விட்டார்.*

*அது புரட்டாசி மாதத்தில் ஒரு நாள். அன்று நல்ல வெயில் காய்ந்து கொண்டிருந்தது. மழைக்கான அறிகுறியே இல்லை. இருந்தும் சிறிது நேரத்தில் சிறியதோர் கார்மேகம் தோன்றி மழைத்துளிகள் சில விழுந்தன. வெளியே மழைபெய்கிறது என்பதாக அவர் கூறியதன் உட்கருத்து, விருபாக்ஷ குகை போன்ற பொது இடத்தில் அவர் வசித்து வந்ததால், வெளி உலகத்தினர் பலரின் பலவிதமான கவனிப்பிற்கு எவ்வித தேவையுமின்றி அவர் இலக்கானார் என்பதே. உலகியல் வாழ்வே பெரிதெனக் கொண்ட மனிதரும் கூட இவருடைய தோற்றம், நடந்து கொள்ளும் விதம் இவற்றை கண்ணுற்று, இவர் ஒரு சாதாரண சாதுதான் என்று அலட்சியப்படுத்தவில்லை. பொதுமக்களின் கவனம் அவர்பால் ஈர்க்கப்பட்டது; அவர்கள் அவரைப் போற்ற ஆரம்பித்தனர். இதனை அவர் தவிர்க்க விரும்பினார்.*

*அச்சமயம் திரு.C.P. நாதன் தன் குடும்பத்தினருடன் ஒரு வாடகை வீட்டில் இருந்துவந்தார். சிறிது காலமாக பக்கவாத நோயினால் தாக்குண்டு, செயல்பட முடியாமல் இருந்து வந்ததால் வீட்டிற்குத் தொடர்ந்து வாடகை கொடுத்துவர முடியாதவராகி, வேறு ஒரு இடம் பார்க்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார். இச்சிரமத்தை திருமதி. நாதன் திண்ணை சுவாமிகளிடம் கூறிய பொழுது, அவர் பக்கத்திலிருந்த காலி இடத்தை காட்டி, நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்கள் வீடு அங்கே கட்டப்படுகிறது, என்றார். கூடிய சீக்கிரம், அக்காலி இடம் டேவிட் மெகாவருக்குச்*

*சொந்தமானது என்றும், 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு அவர் நிலத்தை வாங்கிய அதே விலைக்கு அதனை விற்க இருக்கின்றார் என்றும் தெரியவந்தது. ஆனால் அவர்களிடம் இருந்த தொகையை வைத்து நிலத்தை மட்டுமே அவர்களால் வாங்க முடிந்தது. பணமில்லாத காரணத்தால் வீடு எப்படிக் கட்டுவது என்று சிந்திக்கக் கூட இயலாதவர்களானார்கள். இதனை அவர்கள் திண்ணை சுவாமிகளிடம் கூறியபொழுது, அவர் அவர்களிடம், மூன்று சாதுக்கள் உங்களுடைய வீட்டைக் கட்டுவார்கள், என்றார். பின்னால் நண்பர்கள் கொடுத்த பணத்தைக் கொண்டும், சாதுஓம் சுவாமி, தேசூர் ரமணானந்தா மடாலயத்தைச் சேர்ந்த சுவாமி சங்கரானந்தா, மேலும் சுவாமி கிருஷ்ணானந்தா என்றும் மூன்று சாதுக்களின் உதவியினாலும் ஒரு சிறிய வீடு அவர்களுக்குக் கட்டப்பட்டது. அதில் தென்னங்கீற்றுக்களால் ஆகிய வராண்டாவும், அதில் திண்ணை சுவாமிகள் இருப்பதற்கான திண்ணையும் அமைந்தன.*

*நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக திண்ணை சுவாமிகள் அத்திண்ணையிலேயே வசித்து வந்தார். எப்பொழுதாவது தான் அவர் அவ்வீட்டின் சுற்றுச் சுவரைத் தாண்டிச் சென்றார். 1976ல் இருந்து 1996 முடிய நான் திருவண்ணாமலையில் இருந்த இருபதாண்டு காலத்தில் ஒரே ஒரு முறையே அவர் அவ்வீட்டின் சுற்றுச் சுவரைத் தாண்டிச் சென்றிருந்தார். 1970ன் இறுதிக் கட்டத்தில், ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அவர் வெளியே சென்று, சுற்றுச் சுவருக்கும் அருணாசலத்திற்கும் இடைப்பட்ட வெட்ட வெளியில் மூன்று, நான்கு தினங்கள் குத்தலிட்டு உட்கார்ந்து இருந்தார்.*

*நான் திருவண்ணாமலையில் இருந்த ஆரம்பகாலத்தில், அவர் திண்ணையை விட்டு இறங்குவது, தரையில் குத்தலிட்டு உட்கார்ந்து உணவு*

உண்பதற்கும், வெளியே இருந்த கழிப்பிடத்திற்குச் சென்று வருவதற்கு மட்டுமே. சிற்சில சமயங்களில் வெளியே இருந்த மேடையில் அருணாசலத்தைப் பார்த்தவாறு அமர்ந்திருப்பார். எப்பொழுதாவது சுற்றுச்சுவரை ஒட்டி அமைந்துள்ள வாயிற்கதவு வரை சென்று வருவார். இவை தவிர, எப்பொழுதும் அவருடைய திண்ணையிலேயே சாய்ந்தவாறு அமர்ந்திருப்பார். நான் திருவண்ணாமலைக்கு வருவதற்கு முந்திய காலத்தில் சில சமயங்களில் அவர் ரமணாஸ்ரமத்திற்கு அருகிலுள்ள பாலி தீர்த்தத்திற்குச் சென்று, அக்குளத்தில் சிறிது நேரம் மூழ்கிக் குளித்து, ஈரம் சொட்டும் மேலாடையுடன் உலரவிட்டுக் கொண்டே திரும்புவாராம். நான் அங்கிருந்த காலம், ஒருமுறை வீட்டிற்குப் பின் உள்ள கிணற்றிற்குச் சென்று, சில வாளி தண்ணீர் எடுத்துத் தன் மேல் விட்டுக் கொண்டார். இவ்வாறு ஆகிய சில சமயங்களைத் தவிர்த்து அவர் குளித்தது இல்லை. ஆனால் அவருடைய உடல் எவ்வித துர்நாற்றமும் இன்றி இருந்தது.

அவர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்கவை பல. சில நான் நேரில் கண்டவை. சில மற்றவர்களால் எனக்குச் சொல்லப்பட்டவை மேலும் சில அவரால் நிகழ்ந்த சிறு சிறு அற்புதங்கள் என்று அவரது அன்பர்கள் கூறுபவை.

முதலாக அவரது புற வாழ்வில் மிகவும் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென்றால் இவ்வளவு நீண்ட காலம் தன்னை சுற்றி எது நிகழ்ந்தாலும் நிகழாவிட்டாலும் ஒரு சிறிதும் சலனமுறாது இருந்த ஒரே இடத்தை விட்டு அகலாமல் மௌனம் காத்து வந்ததுதான். இதைக் கொண்டு அவரைச் சுற்றி நடந்தவை அவருக்கு தெரியாது என்று கருத இடமில்லை. எப்பொழுதாவது அவர் பேசிய வார்த்தைகளைக் கொண்டு பார்த்தால் ஐந்து புலன்களின் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடியாத சில

*விஷயங்கள் உட்பட பலவற்றை அவர் தெரிந்து வைத்து இருந்தார் என்பது தெளிவாகிறது. ஆனால் எதனாலும் சலனமடையாது, பாதிப்படையாது வாளாவிருந்தார்.*

*1985 இறுதியில் கண்பிறையின் காரணமாக அவர் பார்வையை இழந்தார். இருப்பினும் மருத்துவர் எவரையும் அவரது கண்களை சோதிக்க அனுமதிக்கவில்லை. இதன் காரணமாக ஏற்கனவே குறைவான அவரது உடல் தழுவிய செயல்கள் மேலும் குறைந்தன. திண்ணைக்கு அருகில் மேசை மேல் வைக்கப்பட்ட தட்டில் உள்ள உணவை எடுத்து திண்ணையில் சாய்ந்தவாறே உண்டார். திண்ணையை ஒட்டி வைக்கப்பட்ட பாத்திரத்தில் தேகசுத்தி செய்து கொண்டார். இதைத் தவிர்த்து தேகத்தின் நலமும் வழுவும் குலைந்து போவது குறித்து சற்றும் கவலையுறாது முற்றிலும் உதாசீன பாவத்தில் இருந்தார். அவரது அகநிலை எப்பொழுதும் அசைவற்று இருந்தது.*

*இறுதியாக அவரது 91 வது பிறந்த நாளுக்குச் சில நாட்களுக்கு முன்பு அச்சுற்றுச் சுவருக்குள் இருந்த அனைவரும் உறங்கிக் கொண்டிருந்த அதிகாலை நேரத்தில் ஓசையில்லாத வாழ்ந்த அவர் ஓசைப் படாது உடலை நீத்தார். அவரது புனித உடல் வழக்கம் போல் திண்ணையில் சாய்ந்திருந்தது. அண்ணாமலையின் மேல் புனித தீபம் ஏற்றப் படுவதற்கு சிலமணி நேரம் முன்பாக அன்று மதியம் அவரது புனித உடல் சாதுக்களுக்கு உரிய மரபின்படி பக்தி சிரத்தையுடன் அடக்கம் செய்யப்பட்டது. அவர் அடக்கம் செய்யப் பட்டுள்ள இடம் சாது ஓம் சுவாமிகளின் சமாதி (ஞானாலயம்) கோவிலுக்கு பக்கத்தில், அவர் இவ்வளவு காலம் வாழ்ந்திருந்த திண்ணையை ஒட்டி உள்ளது.*

*சும்மாவிருத்தலின் மகத்துவத்தை அறியாது செயல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வுலகத்தின் பார்வையில் திண்ணை சுவாமிகளின்*

*மகத்தான வாழ்வில் பெருமை ஏதும் இல்லாது போல் தோன்றலாம். அவர் பேசவோ, எழுதவோ, உபதேசிக்கவோ இல்லை. இவ்வுலகத்தினரால் கருதப்படும் உபகாரமான காரியம் ஒன்றும் அவர் செய்யவில்லை நம்மால் ஏற்றுக் கொள்ள முடிகின்றதோ இல்லையோ அவரது சும்மா இருத்தலே பகவான் இவ்வுலகத்திற்கு அளித்த பேரருளாம். அவ்வருளின் பலனை அறியவோ, அளக்கவோ நமது மதியால் இயலாது. குருவாசகக் கோவையின் 303 வது பாடலை நினைவு கூறலாம்:*

*பாவமெலாம் பாற்றும் பரம பவித்திரமாம்*
*தேவர் மிசையிந்தபரி சேட(ம்) என்பர் பூவுலகிற்*
*சச்சிட்டர் வாழுஞ் சதாசார வாழ்வேஅவ்*
*உச்சிட்ட மாக்கொ(ள்) உளத்து*

*ஜீவன் முக்தர்களான ஞானிகள் இவ்வுலகில் வாழக் கிடைப்பதே இவ்வுலகம்பெற்ற ஈசுவரப் பிரசாதம் ஆகும். அகந்தையை இறைவன் உண்டொழித்த பின் மிஞ்சுவது பரம பவித்திரமான ஆன்ம சொரூபமாதலால் ஆன்மஞானிகளே ஈசுவரபிரசாதம் ஆவர். பரம பாவன பிரசாதத்தால் பாவமெல்லாம் நீங்குவது போலவே ஞானிகளின் வெறும் இருப்பே சாந்நித்யமே (அவர்கள் பேசவோ, உபதேசிக்கவோ, எழுதவோ கூட வேண்டியதில்லை) பூவுலகின் பாவங்கள் அனைத்தையும் நீக்கி விடும் என்பதாம் சாது ஓம் சுவாமிகளின் விளக்க உரை.*

## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

*ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாக செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## 6. மஹரிஷி என்னும் மாமனிதர்

*மதுரைக்கு அருகில் உள்ள திருச்சுழி கிராமத்தில் டிசம்பர் 31, 1879 அன்று பகவான் திரு அவதாரம் நிகழ்ந்தது. அவ்வளவாகப் பண பரவு இல்லாத ஒரு மதிப்பிற்குரிய அந்தணர் குலத்தில் அவர் பிறந்தார். அவரது தந்தை ஒரு வழக்கறிஞர். பகவானும், அவரது அண்ணனும் ஊரில் உள்ள ஒரு பள்ளியில் கல்வி பயின்று வந்தனர். ஆரம்ப நாட்களில் வெங்கடராமன் பற்றிச் சிறப்பாகக் கூற ஒன்றுமே இல்லாது இருந்தது. இந்தச் சிறுவனிடம் ஒரு அளவிடற்கரிய ஆன்மிக சக்தி கருக் கொண்டு உள்ளது என்பதற்கு எந்த ஒரு அறிகுறியும் இல்லாது இருந்தார். வெங்கடராமன் படிப்பில் அவ்வளவாக ஈடுபாடு கொள்ளாத, விளையாட்டில் மிக்க ஆர்வம் கொண்ட ஒரு சாமான்யச் சிறுவனாகவே தென்பட்டார். ஆயினும், அவரது பரம்பரையில் ஒவ்வொரு தலைமுறையிலும் யாரேனும் இல்வாழ்வை நீத்துத் துறவியாவர் என்ற நம்பிக்கை இருந்தது. ஆயினும், வெங்கடராமன் அங்ஙனம் துறவி ஆவார் என்பதற்கு ஓர் அறிகுறியும் இல்லை. அவர் படித்த இறைநூல் தமிழ் பெரிய புராணம் ஒன்றுதான். அதில் 63 சைவ நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு கூறப்பட்டுள்ளது. அந்த நூலினைப் படிக்கும்போது நாயன்மார்கள்போல் தாமும் ஓர் ஆன்மிக நிலையை அடைய வேண்டும் என்ற ஆவல் தம்முள் எழுந்ததாக பகவான் பின்னாளில் கூறினார். அச்சிறுவனின் ஆத்மிகப்*

பயணத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக உறவினர் ஒருவர் தாம் ‘அருணாசலத்திற்கு’ சென்று வந்ததாகக் கூறியது அமைந்தது. அது சிறுவன் வெங்கடராமன் இதயத்தில் ஞான நிலையைத் தூண்டும் பொறியாக அமைந்தது.

சிறிது காலம் கழிந்தபின்னர் அச் சிறுவனுக்கு ஓர் அற்புத அநுபவம் நிகழ்ந்தது. அவன் அறையில் அமர்ந்து இருந்தபோது திடீரென மரணத்தைக் குறித்த பெரும் அச்சம் அவன் உள்ளத்தைக் கவ்வியது. மிக்க இளம் வயதும், எத்தகைய நோய்க் குறிகளும் இல்லாத இந்தச் சிறுவனுக்கு காரணம் ஏதும் இல்லாமலேயே மரண பயம் வந்தது. நிறைய பேருக்கு இத்தகைய அச்சம் எழலாம். ஆனால் சிறுவன் வெங்கடராமன் இந்த அச்சத்தை எதிர்கொண்ட விதம் பிரத்யேகமாக அமைந்தது. அவன் யாரையும் உதவிக்கு அழைக்க வில்லை. எந்த வைத்தியரின் உதவியையும் நாடவில்லை. அவன் தரையில் நீட்டிப் படுத்துக் கொண்டான். அமைதியுடன் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டான்.

என்னை நோக்கி மரணம் வந்து கொண்டு இருக்கிறது. ஆனால், மரணிப்பது என்பது எது? எனது உடல் இப்போது எவ்வித உணர்ச்சியும், அசைவும் இல்லாமல் உள்ளது. அது ஒரு ஜடம்போல் உள்ளது. ஆனால் நான் எனப்படும் எனது ப்ரக்ஞை உணர்வு எவ்விதத்திலும் பாதிக்கப்படாமல் இருந்து கொண்டே உள்ளதே எனவே ‘நான்’ எனப்படும் இது, மரணிக்கும் எனது உடலில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. எனவே ‘நான்’ இந்த உடல் அல்ல. அதனைக் கடந்த ஒன்றாகும்.

சிறிது நேரத்தில் உடலுக்கு உணர்ச்சி திரும்பியது. ஆயினும் ‘நான்’ என்னும் பரமாத்ம உணர்வு நிலைத்து நின்றது. உண்மையான ‘நான்’ எனும் பரமாத்ம உணர்வு, நிரந்தரமற்ற இந்த அகங்காரம் என்னும் பொய்யான



உணர்வில் இருந்து வேறுபட்டது என்பதை அந்தச் சிறுவன் முற்றிலும் அறிந்தான்.

இந்த ஆன்ம எழுச்சி எழுந்த சில நாட்கள் கழித்து, என்னைக் குறித்துக் கவலையுற்றுத் தேட வேண்டாம் என்ற ஒரு குறிப்பை மட்டும் வீட்டில் வைத்துவிட்டு, ‘இது நல்ல காரியத்தில்தான் பிரவேசித்து இருக்கிறது’ என்ற உறுதியை அவர்கட்கு அளித்து விட்டு, சிறுவன் வெங்கடராமன் தனது ஆத்மிக யாத்திரையைத் தொடங்கினான். தனது பயணச் செலவுக்குத் தேவை என்று அவன் கருதிய சிறு தொகையை மட்டும் எடுத்துக் கொண்டு, புகை வண்டியில் பயணித்து, சிறிது நடைப்

*பயணம் இடையில் வர, அவன் திருவண்ணாமலையை அடைந்துற்றான். அருணாசலேஸ்வரரைச் சந்தித்தபின் தனது பூணூலையும், குடுமியையும் களைந்து எறிந்து, அண்ணாமலையின் பல்வேறு ஆலயங்களிலும், குகைகளிலும் அடுத்தடுத்துத் தங்கினான். இங்ஙனம் ஆழ்ந்த சமாதியில் இருக்கும் சிறுவன் யார் என்பதுகூட எவருக்கும் தெரியவில்லை. தனது உடல் ப்ரக்ஞை இன்றி நாட்கணக்கில் சிறுவன் தன் ஆத்மாவிலேயே ஆழ்ந்திருந்தான். முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட தேகமும் நலிவுற்றது.*

*'யார் இந்த நலிவுற்ற சிறுவன்' என்று பரிதாபம் கொண்ட சிலர் அளித்த சிறிய அளவிலான உணவை மட்டும் உண்டு பெரும்பாலும் அதையும் புறக்கணித்து, சுத்த மௌனத்தில் எப்போதும் ஆழ்ந்திருந்து, எதிர்காலத்தில் பகவான் என்றும் மகரிஷி என்றும் உலகம் போற்றப்போகும் இச் சிறுவன், தெய்வீக மலைச் சாரலிலும், ஆலயத்திலும் தனது நாட்களைக் கழித்தான்.*

*சிறிது சிறிதாக இளைய சுவாமியின் புகழ் பரவத் தொடங்கியது. ஏராளமானவர்கள் 'பிராம்மண சுவாமி'க்கு உணவு கொண்டு வந்து தரத் துவங்கினர். ஆயினும் உயிரை உடலில் வைக்க எவ்வளவு உணவு தேவையோ அதை மட்டுமே உண்டு தனித்திருந்தார். இந்த இளச் சிறுவனின் ஆத்ம விகாசம் எங்கும் பரவி, அருகில் வந்தோர் அனைவரையும் ஆத்ம சிந்தனைக்குள் ஆழ்த்தியது. அது தொடங்கி, பக்தர்களும், சீடர்களும் பல்லாற்றானும் வரத் தொடங்கினர். மௌனத்தில் ஆழ்ந்திருந்த இளம் சுவாமி, தனது சீடர்கள் கேள்விகட்கு விடையாக தனது உபதேசங்களை எழுதித் தரத் துவங்கினார். இந்த உபதேசங்கள் ஞானத்தின் சுவைப் பிழிவாக 'நான் யார்?' மற்றும் 'விசார சங்கிரகம்' என்னும் தலைப்பில் வெளிவந்தன.*

*இதற்கிடையில் அன்னையும் உறவினரும் அவர் அண்ணாமலையில் இருப்பதை அறிந்து கொண்டு, அங்கே வந்து அவரை வீடு திரும்புமாறு வேண்டினர். பகவான் அதைத் திட்டவட்டமாக மறுத்த பின்னர் அவர்கள் திரும்பச் சென்றனர். பின்னாளில் அன்னை அழகம்மை, தம் உறவினரை, வீடு அனைத்தையும் நீத்து, பகவானிடம் அண்டி வந்த பின்னர், அவரைத் தம்முடனேயே ஆச்ரமத்தில் இருத்திக் கொண்டார். பகவானை நாடி வரும் அன்பர்கள், அணுக்கத் தொண்டர்கள் மற்றும் பகவான் என அனைவருக்கும் உணவு படைக்கத் தொடங்கினார். பகவானது சீடராகவும் ஆனார். பகவானது அருள் வழிகாட்டலால் அவர் பின்னர் முக்தி நிலையையும் அடைந்தார்.*

*இதுவரை அனைத்திலிருந்துமே ஒதுங்கி இருந்த பகவானின் வாழ்வில் இப்போது ஒரு மாற்றம் நிகழத் தொடங்கியது. பகவானின் ஆன்மிகக் கொடுமுடி நிலையை அறிந்த அன்பர் பலர், அவரை நாடி அருகாமை ஊர்களில் இருந்தும் தொலைவிலிருந்தும் வரத் தொடங்கினர். அங்ஙனம் வந்தவர்களில் ஒருவரான கணபதி சாஸ்திரி என்னும் ஒரு பேரறிஞர் பகவானிடம் பல கேள்விகளைக் கேட்டு விடைபெற்ற பின், அவருக்கு 'ரமண மகரிஷி' என்று நாமம் சூட்டினார். Self Realisation என்ற ஸ்ரீ நரசிம்ம சுவாமியின் நூல் மற்றும், 'Search in Secret India' என்ற தலைப்பிட்ட ஆங்கில நாட்டு எழுத்தாளரான பால் பிரண்டனின் நூல்கள் வாயிலாக பகவானின் புகழ் மேலும் பரவி, இடையறாத வெள்ளமாக அன்பர்கள் வரத் தொடங்கினர்.*

*இங்ஙனம் பகவானிடம் தங்கள் தேடுதலுக்கு விடை நாடி வந்த பல்வேறு ஐயங்களுக்கு பகவான் அளித்த விளக்கங்களும் பிரபல்யமாயின. மேனாட்டிலிருந்து வந்த பேரறிஞர் பலர் அவர் திருவடிக்கீழ் அமர்ந்து பெற்ற அனுபவங்களில் சில, பொன்விழா மலரில் கட்டுரையாக வெளிவந்துள்ளன.*

பின்னர் அவரது இளவல் ஆச்ரமம் வந்து ஆச்ரம நிர்வாகத்தை மிகச் சிறப்பாக செய்து வரலானார். ஆனால் பகவானோ, உலகத் தொடர்பான விஷயங்களையோ, சௌகர்யங்களையோ சிறிதும் மனதில் கொள்ளவில்லை. அவரது உடைமைகள் எல்லாமே இவைதான் ஒரு மூங்கில் தடி, ஒரு மரத்தாலான கமண்டலம் மற்றும் ஒரு கௌபீனம்.

முன் பத்தியில் நாம் கண்ட இந்த இரு நூல்கள் தவிர, பகவான் தமிழ், தெலுங்கு மற்றும் சம்ஸ்கிருதத்தில் சில பாக்களையும் யாத்தார். சில நூல்களுக்கு விளக்கங்களையும் அளித்துள்ளார். இந்த நூல்கள் புகழ்பெற்ற எழுத்தாளர்களால் முகவுரை எழுதப் பெற்று, ஆங்கில மொழிபெயர்ப்பாகியும் வந்துள்ளன.

தம் வாணாள் முழுவதுமே தம்மை நாடி வருவோர்க்கு எல்லாம் மகரிஷி எளிதில் அணுகக் கூடியவராக இருந்தார். இந்தியாவில் மிகத் தீவிரமாக அனுசரிக்கப்படும் ஜாதி வேறுபாடுகள், பகவானின் சந்நிதியில் பொருள் இழந்து போயின. உயர்குடியைச் சேர்ந்த அந்தணர்கள் அவரது முன்னிலையில் தாழ்குலத்தோருடனும், முஸ்லீம்கள் மற்றும் மேலைநாட்டினருடன் சேர்ந்து அமர்ந்து இருந்தனர். ஆத்ம விகாசம் பரவி நின்ற அவர் திருமுன்னர், உலகினைத் தொல்லைக்கு உள்ளாக்கும் பிரிவினைகள் அனைத்துமே நீங்கி, அனைத்தும் ஒன்றானது. மனிதப் புரிதலை எல்லாம் கடந்த உயர்நிலையில் பகவான் இருந்தார். அவரிடமிருந்து கதிர் வீசிய ஆன்மிக சாந்தம், முன்வந்தோர் அனைவரது ஐயங்களையும் களைந்தது.

பகவானின் பௌதிக வாழ்வின் இறுதி நாட்களில்தான் இந்தக் எழுத்தாளன் அவர் திருமுன்னர் வர நேரிட்டது. இந்த குறுகிய காலத்தையே தம் வாழ்வின் மிகச் சிறந்த காலமாக இவன் கருதுகிறான். சூரியன் அஸ்தமிக்கும்போதுதான் அச் சூரியன் ஓர்

ஒளி வெள்ளத்தில் மூழ்குவதைக் காண்கிறோம். அதுபோன்றே பகவானின் இறுதி நாட்கள் அவரது அவதாரத்தின் பேரெழிலை பிரதிபலிக்கின்றன.

பகவானின் தரிசனத்தில், உடல்மீது ஆன்மா கொள்ளும் பெரு வெற்றியைக் காண முடிந்தது. ஓர் ஆண்டுக்கு மேலாக நீடித்த அவர் உடல் நிலைத் துன்பங்கள் எனக்கு ஏசு சிலுவையில் அறையப் பட்டதை நினைவு படுத்தியது. அவரது நோய் மிகக் கடுமையான ஒன்றாக இருந்தாலும், பகவான் மருத்துவமனையில் இருப்பதை விரும்பவில்லை. நம்மைப் போன்ற சாதகர்கட்கு தரிசனம் தந்து கடைத்தேறச் செய்வதே அவரது நோக்கமாக இருந்தது. எப்போதும் போலவே அவர் நம்முன் அமர்ந்து அருள் தந்தார். அவரது வலியின் கடுமை எவ்வளவு தீவிரமாக இருந்தது என்பதை அவரது முகம் சிறிதும் காட்டவில்லை. அவர் தன் நோயைத் தீர்ப்பதில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. தனது பௌதிக உடலுக்கு என்ன நேரிடும் என்பதைத் தெள்ளத் தெளிவாக அறிந்திருந்த அவரது அக்கறையெல்லாம் நம்மைக் கரையேற்றுவதிலேயே இருந்தது. துன்பங்களிலிருந்து விடுபட வேண்டி, அவரிடம் வந்த அனைவருக்குமே அவரது பேரருள் கிட்டியது. அவரது ஆத்மிக ரஸவாதம் நமது கடின சித்தத்தையும் கரைத்து, தூய ஜீவனாக மாற்றியது.

அவரது அண்மையின் சீர்மையில் எங்ஙனம் எல்லையற்ற தன்மையில் வாழ்வது, எங்ஙனம் நாம் இழந்த ஆத்மிக ஆனந்தத்தினை மீண்டும் அடைவது என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். அவரது அண்மையில் அமர்ந்து அவரது சூட்சுமமான ஆன்மிகக் கதிர் வீச்சில் திளைத்துக் கொண்டு இருக்கும்போது நான் எண்ணுவேன் யாருக்கு எங்ஙனம் நான் இத்தகைய விலைமதிக்கத்தக்க ஆனந்தத்திற்குக் கைம்மாறு செய்வேன்? என்னுடைய வாழ்வின் சுமைகளையும்

கடமைகளையும் தாமே ஏற்றுக் கொள்வோன் யார்? யார் இந்த மகான், பாவம் ஏதும் தீண்டாத, எத்தகைய தீச் செயலையும் சிந்தையிலும் புரியாத இப் பெருந்தகை யார்? ஆயினும், அவரது திருவடிக் கீழ் அமர்ந்து, பேரமைதியையும், நாம் அனுபவிக்கும் அற்பமான அசௌகரியங்களையும் களையும் வழியையும் நாடி வரும் என்னிலும் என்போன்ற பலரிலும் இருப்பது எது? கபடம் நிறைந்த நாங்கள் அவர் எதிரில் சௌகரியமாக அமர்ந்துள்ளோம். கபடம் சிறிதுமற்ற இப்புனிதரோ பெரும் தேக உபாதையை அனுபவித்துக் கொண்டு உள்ளாரே?

என்னுள் ஒரு குரல் கேட்கிறது, அந்த ஆத்மாவின் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள நீ ஆயத்தமாய் உள்ளாயா? ஓசையில்லா விடை எழுகிறது, ஆம்! நீ எப்போதும் என்னுடன் இருந்தால் இது நிகழும். அவர் உள்ளார். என்றும் அழியா நிரந்தரமே அவர்.

அன்பர்கள் ரமணோதயத்தைப் பற்றிய தங்கள் மேலான கருத்துக்களைக் கீழ்க்கண்ட மின்னஞ்சல்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

பதிப்பாளர்: arunamramanam@gmail.com

ஆசிரியர்: srammohan8@gmail.com

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2018

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | செவ்வாய் | காலை 11:26 | 2 | புதன் | காலை 09:09 |
| ஜனவரி | 30 | செவ்வாய் | இரவு 10.08 | 31 | புதன் | இரவு 7.58 |
| மார்ச் | 1 | வியாழன் | காலை 8:43 | 2 | வெள்ளி | காலை 7:00 |
| மார்ச் | 30 | வெள்ளி | மாலை 7:40 | 31 | சனி | மாலை 6:30 |
| ஏப்ரல் | 29 | ஞாயிறு | காலை 6:57 | 30 | திங்கள் | காலை 6:52 |

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

*கூடி கிரிவலம் பாடி வருகையில்*
*வேடச்சி காவல் வகுப்பினை வாடி*
*பசியுற்ற பக்தர்க்காய் பின்வரு மாறுரைப்பார்*
*ருசியாய் ரமணர் ரசித்து....* *(126)*

*''எந்தெந்தா காவலனே ஏமேமி காவலனே''*
*சுந்தரமாய் ஸ்ரீபகவான் செப்பிட மந்திரம்போல்*
*இட்டிலி காவலனே கம்பளிச் சாமிசொல்ல*
*சட்டினியும் வந்ததாம் சேர்ந்து....* *(127)*

*[பகவானும் அன்பர்களும் கிரிவலம் வருகையால் அன்பர் ஒருவர் அருணகிரிநாதரின் 'வேடிச்சி காவலன்' வகுப்பைப் பாடத் துவங்கினார். அந்த அழகிய வகுப்பில் ஒவ்வொரு பத்தி இறுதியிலும் 'வேடிச்சி காவலனே' (வேடமங்கையான வள்ளியின் காவலனே) என்று வரும். அதைக்கேட்ட பகவான் புன்முறுவலால் 'ஏமேமி காவலனே' 'எந்தெந்து காவலனே' என்று வினவினார். தெலுங்கில் காவலனே என்றால் என்ன தேவை? என்று பொருள். பகவான் அப்படிச் சிலேடையாகக் கூறியவுடன் அன்பர் ஒருவர் "இட்லி காவலனே! காபி காவலனே! என்ற பொருள்படப் பதில் கூறினார். சில நிமிடங்களிலேயே அங்கே ஒருவர் ஒரு கூடைநிறைய இட்டிலியும், பாத்திரத்தில் காபியும் கொண்டு வந்தார். ஞானியின் சொற்கள் மந்திரம் அல்லவா!]*

*நேச ரமணர்த்த நாரியை போவென்றார்*
*ஆசிரமம் விட்டு அடிவாரம் ஈசனின்*
*இட்டமென்று போய்க்கண்டார் குட்டையில் சேஷாத்ரி*
*கட்டிய வாறெருமைக் கன்று.... (128)*

*செங்கமல சேஷாத்ரி சேற்றில் புரண்டெழுந்து*
*அங்கர்த்த நாரியைஆ ரத்தழுவ எங்கெங்கும்*
*வந்ததாம் சந்தன வாசம் திருப்புகழாய்*
*எந்தரோம கானுபா வுலு.... (129)*

*சொச்சநச்சம் இல்லாது சொந்தங் களையிழந்த*
*எச்சம்மா பாட்டி எஜமானர் இச்சரிதை*
*ஞானிக்கும் அங்கே தியானிக்கும் அன்பர்க்கும்*
*வாயினிக்க இட்டாள் விருந்து.... (130)*

*கட்டிய கோவணமாய் கைகளில் செங்கல்லாய்*
*கட்டுமான வேலையில் கண்டவரை கிட்டவந்து*
*''கூலி!சொல் சாமியெங்கே?'' கேட்க பகவானும்*
*கேலியாய் செய்தார் குறும்பு.... (131)*

*எல்லாம் அறிந்தவர் சொல்லாமல் சொன்னாராம்*
*நல்லாப்போய் தேடிடுவீர் 'நான'ன்றிய பொல்லாத*
*இச்செய்கை ஏனென்ற எச்சம்மா கேள்விக்கு*
*அச்சாரச் சொற்கள் அடுத்து.... (132)*

*''நானொழித்த நானேபோய் நான்தான் பகவானென்(று)*
*ஏன்மொழிய வேண்டும்சொல் எச்சம்மா'' வீணன்றோ*
*நெற்றி யிலெழுதி நாமம் சுமப்பதும்*
*பற்றென்றார் பாட்டியைப் பார்த்து.... (133)*

*[ஒருசமயம், தம் உறவினர் அனைவரையும் மரணத்துக்குப் பறிகொடுத்த எச்சம்மா பாட்டி பகவானுக்கும் ஏனையோருக்கும் உணவு சமைத்துக்*

*கொணர்ந்தார். அப்போது வெறும் கௌபீனம் மட்டுமே அணிந்திருந்த பகவான் கட்டிடம் கட்ட செங்கல்களை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே பகவானை நாடி புதிதாக வந்த ஒருவர், பகவானை ஒருகட்டிடக் கூலியாள் என எண்ணிக்கொண்டு, "கூலியாளே! பகவான் எங்கே உள்ளார்?" என்று வினவினார். பகவான் குறும்புச் சிரிப்புடன் "இங்கே காணோமே! போய் நன்றாகத் தேடிப் பாருங்கள்" என்று கூறினார். இதைப் பார்த்துக்கொண்டு இருந்த எச்சம்மா "ஏன் 'நான்தான் பகவான்' என்று கூறாமல் இப்படி அவரைக் குழப்பி விட்டீர்களே" என்றார். அதற்கு பகவான் "'நான்' என்னும் தன்முனைப்பே அழிந்துபோன நான் 'நான்தான் பகவான்' என்று நெற்றியில் எழுதி ஒட்டிக்கொண்டு செல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.]*

*தத்தெடுத்த செல்லம்மா பெத்தெடுத்து செத்திட*
*வித்ததற்கு நாமம் ரமணனென்று முத்தரிடம்*
*கூறிக் கொடுத்திட பேரன் பகவான்கண்*
*நீரினால் ஞான நனைப்பு.... (134)*

*தொடரும் அமைதிக்குத் தொய்வாம்இக் கண்ணீர்*
*இடருமக்கு எப்படி என்றோர்க்(கு) (or)*
*இடரருளை நீக்காதா என்றோர்க்(கு) உடனே*
*மடையா! அருளிங்கு மாபெரும் அன்பு*
*அடைக்கும்தாள் இல்லை அதற்கு.... (135)*

*வினைகள் பயனாய் விளைவது கர்மம்*
*அணைப்பும், அடியும் அதனால் நினைத்திருப்பாய்*
*ஈசனை நன்றியாய் இவ்வாழ்வில் வெல்வோம்நாம்*
*வாசனை போக்கு வரத்து.... (136)*

*['வாசனை' என்பது முற்கருமங்களால் உள்ளத்தில் பதிந்துள்ள நினைவுத் தடம். அதுவே மீண்டும் மீண்டும் அதே செயலைச் செய்ய நம்மை உந்துகின்றது.]*

*முப்பத்தெட்(டு) ஆண்டுகள் மூதாட்டி எச்சம்மா*
*உப்பையுண்(டு) ஆண்டார் உடல்பகவான் இப்பணிக்கு*
*ஈடாம் சபரி இராமனுக்கு செய்தது*
*வீடுற்றாள் தொண்டால் விரைந்து....(or)*
*வீடாம் பதவிகிழ விக்கு.... (137)*

*சொத்தினை விற்றதில் சேர்த்த பணம்நூறு*
*உத்தண்டி யார்குரு தட்ஷிணையில் புத்தகமாய்*
*செந்தமிழில் சங்கர சூடா மணிபதிப்பு*
*தன்கரத்தால் செய்தார் தவம்....(or)*
*தன்கரத்தால் செய்தார் தொகுப்பு.... (138)*

*காட்சிகள் ,காணும் கருவிழிகள் ,காணுதல்*
*ஆட்சியில் சிக்காத ஆண்மகன் சாட்சியாய்*
*சந்திப்போர் புந்தியில் சிந்தித் தவருள்ளம்*
*வந்திக்கும் தெய்வமா வார்.... (139)*

*[தூல விழிகள் காண்போர் பார்வையில் சிக்காத பகவானின் உண்மை உருவம், தன்முனைப்பு முற்றும் நீங்கி, சாட்சி பாவத்தில் சிந்திப்போர் இதயத்தில் எழுந்தருளுகிறார்.]*

*காத்மண்டு பாண்டே கருவறை லிங்கத்தில்*
*ஆத்மார்த்த அண்ணல் அருள்முகத்தை பார்த்தவர்*
*நூற்றுக் கணக்கில் நிமலர் சிரித்தவண்ணம்*
*தோற்றம் கொடுக்கத் திகைப்பு.... (140)*

*[காத்மாண்டு பல்கலைக்கழகப் பேராசிரியர் ருத்ரராஜ் பாண்டே, அருணாசலர் சந்நிதியில் சிவலிங்கத்தைத் தரிசித்துக் கொண்டு இருந்தபோது சிவலிங்கம் மறைந்து, அங்கே பகவானின் திருவுருவம் காட்சி தந்ததைக் கண்டு வியந்தார்.]*

*சாத்திர வாரிதி சம்ஸ்கிருத சாகரம்*
*பாத்திரம் பொங்காத பாற்கடல் நாத்திறன்*
*காவிய கண்டர் கணபதி சாஸ்திரி*
*சாவிலான் பாதம் சரண்....* *(141)*

*விருபாட்சிப் பொந்தில் வினாயகர் போன்ற*
*சொரூபத்தைக் கண்டகண்டர் சொன்னார் அருளாட்சி*
*முக்காலம் செய்யும்இக் கோலம் கணேசர்*
*சுக்லாம் பரதரம் செப்பு....* *(142)*

*[அதேபோன்று, விருபாட்சி குகையில், காவ்ய கண்ட கணபதி முனிவர், பகவானை வினாயகராகக் காண்கிறார்.]*

*வெள்ளை அரைத்துணியில் பிள்ளை பிரம்மமாய்*
*விள்ளல் நிலாவின் வசீகரத்தில் உள்ளோன்*
*மனம்புத்தி, சித்தம், மமகாரம் நான்கை*
*இனம்கண்டு வென்றோன் இவன்....* *(143)*

*பாதாதி கேசமாய் வேதாந்தம் பார்த்திருந்தும்*
*ஆதார குண்டலினி ஆஸ்ரயித்தும் மேதா*
*விலாசத்தால் ஆசுகவி விற்பன்ன ராயும்*
*கலாசித்தர்க்(கு) இல்லை களிப்பு....(or)*
*கலாசித்தர் நெஞ்சில் குறை....* *(144)*

*காண்டீபர் காவிய கண்ட கணபதி*
*வேண்டினார் கண்ண பகவானை ஆண்டவா*
*ஏட்டுச் சுரைக்காய்நான் ஏகப் பழம்பொருள்நீர்*
*காட்டும் கனியுதிர் கா....(or)*
*காட்டும் கனியாகும் கற்பு....* *(145)*

*ஜபதபம் செய்தேன் சபைதனில் வென்றேன்*
*உபமானம் இல்லா(து) உயர்ந்தேன் அபலையாய்*

*கெஞ்சினார் கண்டர் கருணைக் கடலிடம்*
*விஞ்சும் தவப்பயனை வீழ்ந்து.... (146)*

*பகவான் உவாச*

*உனென்ற ஓசை நவில்வது யாரென்று*
*ஊனுறக்கத் திறக்கீடாய் உன்னிப்பாய் காணென்றும்*
*ஒன்றிவிடும் உள்ளம்நான் ஊறும் இடத்தினில்*
*மன்றமது மெய்த்தவக் குன்று.... (147)*

*விழிப்பு, கனவு, விழுங்கும் சுழுத்தி*
*கழிக்கும் அதுவே'நான்' காண்பாய் உழைப்பாய்*
*உடலான்ம பாவம் ஒழிக்கும் விதத்தை*
*அட!ஆன்மத் தேடல் அதற்கு.... (148)*

*வெட்டியான்போல் நின்று விசாரணைக் கோல்கொண்டு*
*சுட்டும் எழும்பும் சவமனம்மேல் பட்டென்(று)*
*அடித்திட 'நானும்' அடித்திடும் 'நானார்'*
*தடிக்கொம்பும் சாம்பலாம் தீக்கு.... (149)*

*மந்திர ஓசையுள் ளெங்கிருந்து தோன்றுதென்று*
*எந்திரமாய்ப் பார்க்க எழுவாய்க்குள் வந்தடங்கும்*
*உந்தன் மனது ஒடுங்கிட மிஞ்சிடும்*
*விந்தை மவுனம் விளைந்து.... (150)*

*பகவான் காவ்யகண்டருக்கு அளித்த உபதேசம் மந்திர ஜபம் செய்யும்போது அந்த மந்திரம் எங்கு இருந்து எழுகின்றது என்பதைக் கவனியுங்கள். அந்த இடமே ஆத்மா. விழிப்பு, கனவு, ஆழ் உறக்கம் ஆகிய அனைத்து நிலைக்கும் ஆதாரமாய் இருப்பவனே ஆத்மா. 'நான்' என்கிற ஜீவபாவம் கொண்டு 'நான்' எழும் இடத்தை ஆராய்ந்து பின்னர் விசாரிக்கும் 'நானையும்' அங்கேயே ஆழ்த்திடுக!]*



# பழனி – திருவாவினன்குடியும் ரமண அவதாரமும்

**ஆகுரா**

திருவாவினன்குடி வேலாயுத சுவாமி கோயில் அறுபடை வீடுகளில் ஒன்றானது. இவ்வாலயம் பழனி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. சங்ககாலப் புலவரான நக்கீரரும், பிற்காலத்தவரான அருணகிரிநாதரும் திருவாவினன்குடி முருகனைக் குறித்துப் பாடல்கள் பாடியுள்ளனர். அகத்தியர் இங்கு தவம் புரிந்து முருகனிடம் தமிழிலக்கணம் பயின்றதாகப் புராணங்கள் கூறுகின்றன. மலை மீதுள்ள தண்டாயுதபாணி சுவாமி கோயிலே அறுபடை வீடுகளில் ஒன்று என்று பலரால் தவறாக எண்ணப்படுகிறது.

திரு-லட்சுமி, ஆ-காமதேனு, இனன்-சூரியன், கு-பூமாதேவி, டி-அக்கினிதேவன் ஆகிய இந்த ஐவரும் முருகனை பூசித்தமையால் இந்த ஸ்தலத்திற்கு திருவாவினன்குடி என்று ஆயிற்று என்றும் கூறப்படுகிறது.

இத்தலத்தைப் பற்றிய பொதுவான இத்தகவல்கள் நாம் யாவரும் அறிந்ததே.

*1/1/2018 புத்தாண்டன்று பழனியில் வழிபாடு செய்ய வேண்டி நானும் எனது நண்பர்களும் இத்தலத்திற்குச் சென்றிருந்தோம். அதிகாலை அபிஷேக ஆராதனை கண்டுகளித்து கோயிலில் வலம் வரும்போது எத்தனையோ முறை இங்கு வந்து தரிசனம் செய்திருந்தபோதும் இம்முறை இக்கோயிலின் மிகச் சிறப்பான அம்சம் ஒன்று கவனத்தை ஈர்த்தது.*

*கோயிலின் நுழைவு வாயிலில் முருகப் பெருமானின் கருவறைக்கு இடது வலது பக்கங்களில் அமைந்திருந்த இரு சந்நிதிகள் எனது கவனத்தை ஈர்த்தன. கோயிலின் வடக்குப் பகுதியில் அண்ணாமலையார் உண்ணாமுலையம்மன் திருச்சந்நிதிகளும் புறத்தே மதில் சுவற்றையொட்டி அருணகிரிநாதர் திருமேனியும் காணப்படுகிறது. அதற்கு நேர் தெற்குப் பகுதியில் மதுரை மீனாட்சியம்மன் சுந்தரேசுவரர் திருச்சந்நிதிகளைக் கொண்ட சிறிய கோயில் அமைப்பும் அதையொட்டிய மதிற்சுவரில் நக்கீரர் திருமேனியும் அமைந்துள்ளது.*

*ஒருபுறம் மதுரை மறுபுறம் திருவண்ணாமலை இவை இரண்டுக்கும் இடைப்பட்ட கருவறை பாலதண்டாயுதபாணி – பால ரமணராக – இந்த சிறப்பு அமைப்பு வெளிப்படுகிறது.*

*பகவான் ரமணர் அவதாரத்திற்கு முன்பாகவே ஏற்படுத்தப்பட்ட இக்கோயிலின் இந்த அமைப்பு ரமண அன்பர்களுக்கு பகவான் ரமணரின் அவதார முன்னோட்டச் செய்தியாக கிடைக்கப் பெறுகிறது என்பது ஒரு ஆச்சரியமான விஷயம். எதிர்காலத்தில் ரமண அன்பர்கள் இக்கோயிலை பாலரமணரின் கோயிலாகவே கருதி விழா எடுத்து சிறப்பிக்க வேண்டுமென்ற ஓர் பேரவா என்னுள் எழுந்தது. பழனியையும் மற்றும் அடுத்துள்ள பல ரமண மையங்கள் ஒருங்கிணைந்து அபிஷேக ஆராதனைகள் ஒவ்வொரு ஆண்டும் ஒருநாளில் நடத்தி கொண்டாடினால் எவ்வளவோ சிறப்பாக இருக்கும்.*




# திருவண்ணாமலை செய்திகள்

## 138 வது ரமண ஜயந்தி விழா

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 138 ஆவது ஜயந்தி விழா ஸ்ரீ ரமணாச்ரமத்தில் 3/1/2018 புதன்கிழமையன்று நடைபெற்றது. அதிகாலை மங்கள இசை, பாராயணம், மஹன்யாச ருத்ராபிஷேகம், சிறப்பு பூஜை, அபிஷேக அலங்காரங்களுடன் சிறப்பாக நடந்தேறின. திரளான ரமண அன்பர்கள் கலந்து கொண்டு ரமண அருள் பெற்றனர்.

குரங்கு தோட்டத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட பந்தலில் சாதுக்களுக்கு சிறப்பான முறையில் நாராயண சேவையும் ஜயந்தி விழாவிற்கு வருகைபுரிந்த அனைவருக்கும் ஆச்ரமத்தில் சிறப்பு உணவும் வழங்கப்பட்டது.

பெங்களூர் RMCL குழுவினர், சென்னை சின்மயா சகோதரிகள், பெங்களூர் திருமதி. சக்குபாய் ஸ்ரீநிவாசன் குழுவினர் மற்றும் திரு. ஸ்ரீராம்-அனுராதா ஸ்ரீராம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் ஜயந்தி விழாவையொட்டி நடைபெற்றன.

*ரமண ஜயந்தி விழா ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட மதுரை ரமண கேந்திரம், திருச்சுழி சுந்தர மந்திரம், இராமநாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் சென்னை, குரோம்பேட்டை ரமணாலயம் ஆகிய இடங்களிலும் இதேநாளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.*

## ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர், சென்னை

### 138 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் 138 ஆவது ஜயந்தி விழா 3/1/2018 அன்று மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. காலை 6 மணிக்கு மங்கள வாத்தியத்துடன் துவங்கிய இவ்விழா, மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம் என்பதாக காலையில் கொண்டாடப்பட்டது. மதியம் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் ஸ்ரீமதி ஷ்யாமளா ராமச்சந்திரன் ஹரிகதை நடந்தபின்னர் பகவானின் திருவுருவ வீதி உலா மயிலை மாட வீதிகளில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு விழா நிறைவுற்றது. தொடர் லக்ஷார்ச்சனை பகவானுக்கு நடைபெற்றது.*

*7/1/2018 அன்று தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. திருவாளர்கள் டாக்டர் அம்பிகா காமேஷ்வர், சின்மய மிஷன் சுவாமி சுரேஷானந்தா, திருப்பூர் கிருஷ்ணன் மற்றும் டாக்டர் எஸ். ராம்மோஹன் ஆகியோரின் சிறப்பு சொற்பொழிவுகள் நடைபெற்றன. இறுதியாக சிட்லபாக்கம் ராதே கிருஷ்ண மண்டலி மகளிர் குழுவினர் திருமதி. அபிராமி அவர்களின் தலைமையில் ரமண பஜன் 'ரமண சந்நிதிமுறை' பன்னிசையில் பாடினர்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை

### 138 ஆவது ரமண ஜயந்தி விழா

*ஜனவரி 3 புதன்கிழமையன்று காலை மங்கள இசையுடன் துவங்கி வேதபாராயணம் ரமண அஷ்டோத்ர சதநாமாவளி நடைபெற்றது. 700 க்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் கலந்து*

*கொண்ட இவ்விழாவில், மயிலை கபாலீஸ்வரர் ஆலய ஆஸ்தான ஓதுவார் திரு. திருவாசக செந்நாவலர் சற்குருநாத ஓதுவார் அவர்கள் ரமண சந்நிதிமுறை பண்ணிசையுடன் வழங்கினார். பின்னர் அனைவரும் கூட்டாக அக்ஷரமணமாலை, புனர்வசு வண்ணம் மற்றும் தியானப் பாட்டு பாராயணம் செய்தனர். மதியம் அனைவருக்கும் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது.*

# ரமண கேந்திரா செய்திகள்

## ஸ்ரீரமண கேந்திரம், முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

### 138 ஆவது ரமண ஜயந்தி விழா

*பகவானின் ஜயந்தி விழா ஜனவரி 3 அன்று ஸ்ரீலஸ்ரீ பரானந்த மஹராஜ் அவர்கள் முன்னிலையில் (தாயுமானவ ஸ்வாமிகள் தபோவனம்) காலை பத்து மணிக்கு துவங்கி அக்ஷரமணமாலை பாராயணம், சிறப்பு வழிபாடு, அன்னதானம் என 200க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்ள விழா சிறப்பாக நடைபெற்றது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், நங்கைநல்லூர், சென்னை

### 138 ஆவது ரமண ஜயந்தி விழா

*7/1/2018 ஞாயிற்றுக்கிழமை மாலை ஸ்ரீ வரசித்தி விநாயகர் பிரவசன மண்டபத்தில் பகவான் 138 ஆவது ஜயந்தி விழா நடைபெற்றது. அக்ஷரமணமாலை பாராயணத்துடன் துவங்கிய இவ்விழா ஸ்வாமி அபவர்கானந்தர் (ஸ்ரீ ராமகிருஷ்ணமடம், சென்னை) அவர்களின் சொற்பொழிவுடன் சிறப்பாக நடைபெற்றது.*

## ரமண சத்சங்கம், சூளைமேடு

### 138 ஆவது ரமண ஜயந்தி விழா

*3/1/2018 புதன்கிழமை காலை 5.30 மணி முதல் மஹன்யாஸம், ஏகாதச ருத்ர ஜபம், அபிஷேகம், ரமண சஹஸ்ரநாம அர்ச்சனை, அக்ஷரமணமாலை பாராயணம், அன்னதானத்துடன் சிறப்பாக நடைபெற்றது.*

## ரமண சத்சங்கம், பூண்டி, தஞ்சாவூர்

138 ஆவது ரமண ஜயந்தி விழா

*ரமண மகரிஷிகளின் 138 ஆவது ஜயந்தி விழா 7/1/2018 ஞாயிற்றுக்கிழமை இங்கு அமைந்துள்ள ரமண திருக்கோயிலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் சிறப்புப் பாராயணம் பாணலிங்க அபிஷேகம் நடைபெற்றது. அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீரமண சத்சங்கம், வேலூர்

138 ஆவது ரமண ஜயந்தி விழா

*30/12/2017 சனிக்கிழமை மாலை ஸ்ரீ சண்முகனடியார் சங்க வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. ரமண பகவான் அருளிய பாடல்கள் கூட்டுப் பாராயணம் மற்றும் சிறப்பு சொற்பொழிவுகளாக பெரியார்தாசன் கவிஞர். இலக்குமிபதி அவர்கள் பகவானைப் பற்றி மனதையாளும் மகரிஷி என்ற தலைப்பில் உரையாற்றினார். மாலை 7 மணிக்கு ரமணோதயம் ஆசிரியர் டாக்டர். எஸ். ராம்மோஹன் அவர்கள் பகவானது அருள்மழையும் அமுதக்கடலும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். விழாவின் ஏற்பாடுகளை திரு. C.S.நாகராஜன் அவர்கள் சிறப்பாகச் செய்திருந்தார். இவ்விழாவின் இறுதியில் பகவானுக்கு புஷ்பாஞ்சலியும் அனைவருக்கும் அருட் பிரசாதமும் வழங்கப்பட்டது.*

## ஸ்ரீ ரமண மந்திரம், பழனி

138 ஆவது ரமண ஜயந்தி விழா

*ரமண மகரிஷிகளின் 138 ஆவது ஜயந்தி விழா 30/12/2017 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஸ்ரீசாய் சாதன் சண்முகபுரம், பழனி வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்னதானம் வழங்கப்பட்டது. செயலாளர் திரு. காளிமுத்து அவர்கள் வரவேற்க திருவாளர்கள் சாய் நடராஜன், S.V.நாகேஸ்வரன், சிதம்பர குற்றாலம், திருமதி. சௌந்தரம் ராஜகோபாலன், திருமதி. திருவேணியம்மாள் ஆகியோர் உரையாற்றினர். தொடர்புக்கு: N. சோமசுந்தரம், தலைவர்.*

# திரு. M.R. சீனிவாசன்



*திரு. M.R. சீனிவாசன் அவர்கள் கடந்த 3/1/2018 அன்று தமது 95ஆவது வயதில் ரமண பதமடைந்தார். இவர் பகவான் ரமண மகரிஷிகளுக்கு 1906-07 ஆம் ஆண்டிலிருந்து அன்னமளிக்கும் பேறு பெற்றவரான எச்சம்மாள் (லக்ஷ்மி அம்மாள்) அவர்களின் சகோதரரின் பேரன் ஆவார்.*

*பகவான் கைங்கர்யத்திற்கு திரு. M.R. சீனிவாசன் அவர்களின் தந்தை மற்றும் குடும்ப உறுப்பினர்களை எச்சம்மாள் ஈடுபடுத்தினார்.*

*எச்சம்மாள் மூலம் பகவானின் தரிசனமும் அறிமுகமும் சிறுவயதிலேயே கிடைக்கப்பெற்ற எம்.ஆர்.சீனிவாசன் அவர்கள் தரிசித்த நாளிலிருந்து பகவானின் தீவிர பக்தரானார். தில்லியில் பேராசிரியர் கே. சுவாமிநாதன் அவர்களின் நட்பு அன்னாரது ரமண பக்தியை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது. பகவான் மீது பக்திப் பாக்கள் இயற்றலானார்.*

*வேலூர், செய்யாறு மற்றும் வாலாஜபேட்டை முதலிய இடங்களுக்கு தமது வீட்டை மாற்றிக் கொண்ட போதெல்லாம் அவ்விடங்கள் உள்ளூர் பக்தர்களுக்கு சேவை செய்வதற்காக ரமண கேந்திரமாக மாறியது.*

*ரமண ஜயந்தி நாட்களில் ரமண இசை நிகழ்ச்சிகளை நடத்துவதும் சிறு புத்தகங்களை வெளியிடுவதும் இவரது வழக்கமாக இருந்தது.*

*பகவான்மீது தீவிர பக்தி மற்றும் அர்ப்பணிப்பு இவரை பகவானின் 138 வது ஜயந்தி தினத்திலேயே அவர் பதம் சேர்த்தது.*



## 'நானாகாரு'

*'நானாகாரு' அவர்கள் கடந்த 29/12/2017 வெள்ளிக்கிழமை, வைகுண்ட ஏகாதசி தினத்தன்று மதியம் சுமார் 12 மணி அளவில் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஜின்னூரில் இறைவனடி சேர்ந்தார்.*

*'நானாகாரு' என்று பக்தர்களால் அன்போடு அழைக்கப்பட்ட இவரது இயற்பெயர் B.V.L.N. ராஜு என்பதாகும். ஆந்திர மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள ஜின்னூரு எனும் கிராமத்தில் 23, செப்டம்பர் 1934 ஆம் ஆண்டு பிறந்தார். 1957 ஆம் வருடம் ஒரு வயதான மனிதர் கையில் தடியுடன் வந்து தம்மை முத்தம் இட்டு ஆசிர்வதிப்பது போன்று ஒரு கனவினைக் கண்டார். கனவில் வந்த மனிதர் யாராக இருக்கக் கூடும் என்ற ஆறுமாத தேடுதலுக்குப் பின் ஒருநாள் தமது கிராம நூலகத்தில் ஓர் ஆங்கில நாளிதழில் ஸ்ரீ ரமண மகரிஷிகள் என்று அவரது புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தது. தனது கனவில் வந்து ஆசிர்வதித்தவர் பகவான் ரமண மகரிஷிகள் என்று அப்போது அறிந்து கொண்டார்.*

*பகவான் ரமண மகரிஷிகள் தமிழ்நாட்டில் உள்ள அருணாசலத்தில் (திருவண்ணாமலையில்) வாழ்ந்த மகான் என்றும் அவர் ஏப்ரல் 14, 1950 ல் தமது எழுபதாவது வயதில் தமது தேகத்தைத் துறந்தார் என்றும் அறிந்தார்.*

*மகரிஷிக்கு என ஒரு தனிப்பட்ட வாழ்க்கை இல்லை. ஆன்மாவில் எப்போதும் லயித்திருந்தார். சமத்துவத்தையே அவர் போதித்தார். ரமண பகவானது தரிசன மாத்திரத்தாலேயே ஏராளமான அன்பர்களின் நோக்கம் நிறைவேறியது. ஆன்மிக வானில் ஞானசூரியனாக விளங்கினார். அவரது திருநாமத்தை உச்சரிப்பது*

*புனிதமானது. அவர் மகாத்மாக்களுக்கெல்லாம் மகாத்மாவாக விளங்கினார் என்பதையும் அறிந்த அவர் 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரமணாச்ரமத்திற்கு வருகை புரிந்தார். அன்று முதல் ரமண சேவைக்காக தமது வாழ்நாளை அர்ப்பணித்தார். பகவான் தமது வாழ்வில் வந்து தம்மை ரமண சேவைக்காகப் பணித்ததாக அவர் கருதினார்.*

## ரமணாச்ரம கோசாலை முருகேசன் இறைவனடி சேர்ந்தார்

*ஸ்ரீ ரமணாச்ரம கோசாலையில் பணியாற்றி வந்த திரு. முருகேசன் 29/11/2017 அன்று காலை சுமார் 5 மணி அளவில் காலமானார். மதியம் 1 மணி அளவில் இறுதிச் சடங்கு நடைபெற்றது.*



*1930-களின் பிற்பகுதியில் சிதம்பரம் அருகே பிறந்த திரு. முருகேசன் 1992 ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த மடத்தின் பரிந்துரை கடிதத்துடன் ஆச்ரமத்திற்கு வந்து சேர்ந்தார்.*

*ஆரம்பத்தில் சில வருடங்கள் ஆச்ரம பாகசாலை மற்றும் தியான ஹாலில் பணியாற்றி வந்த இவர் பின்னர் ஆச்ரம பசு மடத்தின் பொறுப்பாளராக சுமார் 20 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்தார்.*

*தினமும் அதிகாலை 4 மணிக்கே கோசாலைக்கு பணிக்கு வந்து விடும் இவர் தனது கடைசி நாள் வரை பணியாற்றினார். கடின உழைப்பாளி என்று அறியப்பட்ட இவர் கைசிக ஏகாதசி, தீப திருவிழா கூடிய நாளில் தூக்கத்தில் அமைதியாக அருணாசல பதம் சேர்ந்தார்.*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | ......... | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | ......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | ......... | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ......... | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ......... | 9444172623 |
| ***புதுச்சேரி*** ரமண கேந்திரம் | ......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | ......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | ......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |
| ***ஓசூர்*** அசோக்குமார் | ......... | 8643842772 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



138 ஆவது ரமண ஜயந்தி - ரமணாலயம்
குரோம்பேட்டை



Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

